வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 07.06.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 189 பக்கங்கள் : 16

## வர்த்தகரை அச்சுறுத்தி கப்பம் பிரசன்னவுக்கு கடூழிய சிறை!

### கொழும்பு மேல் நீதிமன்று நேற்று தீர்ப்பு



கொழும்பு, ஜூன் 07

வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி கப்பம் கோரிய வழக்கில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை குற்றவாளி என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நேற்று அளிக்கப்பட்ட இந்தத் தீர்ப்பின் பிரகாரம் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரு வருட கடூழிய சிறைத் தண்டனையுடன், இரண்டு கோடியே 50 இலட்சம்

15

## அரச உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்தவாறு கடமை!

### புதிய திட்டம் தயாராகிறது

கொழும்பு, ஜூன் 07

அரச உத்தியோகத்தர்கள் வீடுகளிலிருந்து வேலை செய்வதற்கான திட்டம் ஒன்றை வகுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் தற்போது மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரச ஊழியர்கள் பணிக்கு செல்வதால் ஏற்படும் அதிக செலவைக் குறைப்பதே இதன் நோக்கம்

15

# புலிகள் மீளுருவாக்கம் என்று அரசு சதித் திட்டம் தீட்டுகிறது

## ரெலோவின் தலைவர் குற்றச்சாட்டு

- தமிழர் கோரிக்கையை ஒரேகுரலில் கூறுவோம்
- கஜேந்திரகுமாருடனும் பேசத் தயாராகிறோம்
- புலம்பெயர் தமிழர் முதலீட்டை அரசு முடக்கும்
- மாகாண சபைக்கு நிதி அதிகாரம் வேண்டும்

வவுனியா, ஜூன் 07

**நாட்டில் பரவலாக இடம்பெற்று வரும் துப்பாக்கி சூட்டு சம்பவங்களும் பாதுகாப்பு செயலரின் புலிகள் குறித்த கருத்தும் விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் என்ற சதித் திட்டத்தை அரசாங்கம் தீட்டுகிறது என்று ரெலோ கட்சி தெரிவித்துள்ளது.**

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்னைகளை - கோரிக்கைகளை 21ஆம் திருத்தச் சட்டத்தில் ஒட்டுமொத்தமாக - ஒரே குரலாக உள்ளடக்குவோம். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்துக்களை கேட்டு வருகின்றோம். இந்தக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து வருகிறார்கள்.

இது விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியுடனும் பேசுவதற்கு எண்ணுகிறோம் என்று அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

மேலும், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிட்டால் அவற்றை இந்த அரசாங்கம் முடக்கும் என்றும் நேற்று

15

## யாழ்ப்பாணத்தில் இன்று முதல் விவசாயிகளுக்கு ம.எண்ணெய்!

### அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்ப்பாணத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எரிபொருள் அட்டைக்கு விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று அரசாங்க அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார்.

கமநல சேவைகள் திணைக்களத்தால் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் அட்டைகளுக்கே மண்ணெண்ணெய் வழங்கப் படவுள்ளது. மாவட்ட செயலர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநல சேவைகள்

15

## மீண்டும் உயரலாம் எரிபொருள் விலை?

கொழும்பு, ஜூன் 07

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பால் இந்த மாத நடுப் பகுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்று ஐக்கிய தொழில்சங்க அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

"அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் கருத்தின் பிரகாரம், எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததையடுத்து, மே மாதம் 24 ஆம் திகதி விலையில் திருத்தம் செய்ய விண்ணப்பிக்கப் பட்டது.

15

## அதானி குழுமத்துடனான ஒப்பந்தம் சட்டவிரோதம்!

### மீறினால் சட்ட நடவடிக்கையாம்

கொழும்பு, ஜூன் 07

500 மெகாவாட்ஸ் காற்றாலை மின் திட்டத்துக்காக இந்தியாவின் அதானி குழுமத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டவிரோதமானது. இதனை நிறைவேற்றினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு இலங்கை காற்றாலை சக்தி சங்கம் அறிவித்துள்ளது.

ஜூன் 2 ஆம் திகதியிடப்பட்ட அறிவிப்பில், இலங்கை மின்சார சட்டத்தின் கீழ், கொள்முதல் செயல்முறைக்கு வெளியே தன்னார்வ அடிப்படையில் பெரிய

15

## தவணை முறையில் சைக்கிளுக்கு பணம்!

கொழும்பு, ஜூன் 07

நாட்டிலுள்ள பல பிரபல லீசிங் மற்றும் நிதி நிறுவனங்கள் சைக்கிள்களுக்கு தவணை முறையில் பணம் வழங்குவதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

நாட்டில் சைக்கிள்களுக்கு அதிக கிராக்கி காணப் படுவதுடன் அவற்றின் விலைகளும் உச்சமடைந்துள்ளன. இதனால், நுகர்வோர் இலகுவாக பணம் செலுத்தி சைக்கிள்களை பெற வழியேற்படுத்துவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை யேற்றம் காராணமாக மக்கள் சைக்கிள்களை

15

## நிமால், அமரவீரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை இல்லை!

### பின்வாங்கினார் மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 07

"கட்சியின் மத்திய செயல் குழு எடுத்த முடிவை மீறி அமைச்சு பதவிகளைப் பெற்றுக் கொண்ட நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது", என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால

15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் மக்களின் அரசியல் தலைமை, பதின்மூன்றையும் அதனால் வந்த மாகாண சபைகளையும் தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு தீர்வாக - அதன் தொடக்கப் புள்ளியாகக்கூட தொட்டுப்பார்க்க தயாராக இல்லை.

ஆனால், மாகாண சபைகளுக்கு தேர்தல் வந்தால் முதல்வர் வேட்பாளருக்காக மல்லுக்கட்ட மாத்திரம் தயாராக இருக்கிறது ஒரு கூட்டம். அது வேறு சங்கதி.

ஆனால், இந்த பதின்மூன்றைப் பற்றி 'ஈழநாடு' ஆசிரியர் மாத்திரம் விடுவதாக இல்லை. அதுபற்றி அவர் எழுதுகின்றபோது, அதனைப் படித்துவிட்டு சில வேளைகளில் இந்த ஊர்க்குருவியே சினந்துகொண்டதுண்டு.

அது நமக்கு வேண்டாததுதான் ஆனாலும், அதனையும் பறிகொடுத்துவிட்டு நிற்பதா என்றால், நம்மவர்கள் எவரிடமும் அதற்கு விடையில்லை.

மாகாணசபையின் முதல்வர் நாற்காலியில் அமர்ந்தவுடன், இது ஒரு, கால் இல்லாத நாற்காலி என்று வர்ணித்த முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரனே, மாகாணசபைகளால், தாயகத்தின் நிலப்பரப்பு பறிபோவதையாவது தடுக்கமுடியும் என்று பின்னர் சொன்னது நினைவிருக்கலாம்.

நமக்கு அது வேண்டியதா அல்லது வேண்டாததா என்பதுபற்றி அலசுவதல்ல இந்தப் பத்தியின் நோக்கம்.

அந்த பதின்மூன்று தேவையற்ற ஒன்று. அது யானைக்கு தீனி போடுவதுபோல, நாட்டுக்கு பெரிய சுமையானது என்ற கருத்தைக் கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர் இன்றைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ என்பது தெரிந்ததே.

தன்னால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இருபத்தியோராவது அரசமைப்பு திருத்த யோசனைகளை அஸ்கிரிய - மல்வத்த பீடாதிபதிகளிடம் கொண்டுசென்று காண்பித்து, அவர்களின் ஆதரவைப்பெற அவர் முயன்றிருந்தார்.

இந்த பீடாதிபதிகளுடனான சந்திப்பின் பின்னர் ஊடகர்கள் மத்தியில் பேசிய அவர், நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக நீக்கிவிடமுடியாது என்றும், அவ்வாறு செய்தால் மாகாண சபைகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி இழந்துவிடுவார் என்றும், அது மாகாணங்கள் பிரிந்துபோவதற்கு வழிவகுத்துவிடும் என்று மகாநாயக்கர்கள் அச்சம் தெரிவித்ததாகவும் தெரிவித்திருந்தார்.

அதாவது, இந்த அச்சத்தை மகாநாயக்க தேரர்கள் நேரடியாக ஊடகங்களிடம் தெரிவிக்கவில்லை. அவர்கள் தெரிவித்ததாக விஜயதாச ராஜபக்ஷதான் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே இருபத்தியோராவது திருத்தம் என்றபெயரில் தனிநபர் பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஒரு பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்ததும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, அதுகுறித்து பலரும் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபனை வழக்குகளை தாக்கல் செய்திருப்பதும் தெரிந்ததே. அதுதொடர்பான வழக்குகள் விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்நிலையிலேயே, அரசாங்கமே ஒரு திருத்தத்தை தயாரித்து, அதனை அமைச்சரவையில் தாக்கல் செய்த பின்னர், அரசியல் கட்சிகளின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டு, இறுதிசெய்யப்பட்டிருக்கின்றது. அது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதுவும் இருபத்தியோராவது திருத்தம் என்று அழைக்கப்படுமா என்பது வெறு ஒரு சர்ச்சையை கிளப்பி விட்டிருக்கின்றது.

ரஞ்சித் மத்தும பண்டாரவின் திருத்த பிரேரணையை தயாரித்தவர் யார் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். தானே அதனை தயாரித்ததாக ஏற்கனவே நமது கூட்டமைப்பின் எம். பி. ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்தார். அந்த நகலில், மாகாண ஆளுநர்களுக்கு இருக்கும் அளவுக்கதிகமான அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலான திருத்தங்களையும் தான் சேர்த்திருப்பதாக அவரே ஒருதடவை பொதுவெளியில் தெரிவித்திருந்தார். மாகாண சபைகள் எடுக்கின்ற முடிவு ஒன்றை ஆளுநர் நிராகரிக்கின்றபோது, அதற்கு எதிராக நீதிமன்றத்தையும் நாடமுடியாது என்ற ஆளுநருக்கு இருக்கும் பலம்பொருந்திய அந்த அதிகாரத்தை இல்லாமல் செய்யும் வகையிலேயே புதிய திருத்தத்தில் இடம்பெற்றிருப்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதுபோன்ற திருத்த யோசனை எதுவும் இப்போது விஜயதாச ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்படுகின்ற திருத்தத்தில் இடம்பெறவில்லை. அப்படியிருந்தபோதிலும், அவர் அந்த விடயங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே மகாநாயக்கர்கள் தெரிவித்ததாக தெரிவித்திருந்தார்.

அதேவேளை, நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள திருத்தம் தொடர்பான வழக்கில் ஆஜரான சட்டமா அதிபர் திணைக்களம், அந்த திருத்தத்தை நிறைவேற்றவேண்டுமெனில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என்று வாதிட்டிருக்கின்றது. ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்படுகின்றபோது, அது சர்வசன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிவரலாம் என்பது, அதனை தயாரரித்த சட்ட அறிஞர்களுக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். அதனை தெரிவிப்பதற்காகவே விஜயதாச மகாநாயக்கர்களின் பெயரில் ஞாபகப்படுத்தியிருக்கிறார் என்கிறார் விசயம்தெரிந்த அரசியல் தலைவர் ஒருவர்.

- ஊர்க்குருவி

## கல்முனை மாநகர சபையின் உறுப்பினருக்கு அச்சுறுத்தல்

அம்பாறை, ஜூன் 07

மின்தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த சீருடையினர், தன்னை விசாரிப்பதாகக் கூறி மிரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் முறைப்பாடு செய்துள்ளார்.

கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அசீஸிடம் அவர் தனது முறைப்பாட்டை நேற்று திங்கட்கிழமை கையளித்தார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2 ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரிய நீலாவணையிலுள்ள, எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு பேரும் தங்களை புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாக கூறினர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையை கேட்டேன். ஆனால் அவர்கள் தர மறுத்தனர்.

நான் கல்முனையில் உண்ணாவிரதமிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித் துருவி விசாரித்தனர்.

இறுதியில் வெளியில் நடமாடக்கூடாது என்று அச்சுறுத்தியதோடு எனக்கும் மனைவி, பிள்ளை மற்றும் மருமகனுக்கும் அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர்.

இதற்கு முன்னும், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின்போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும், 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின்போதும், இனந்தெரியாத ஆயுத குழுக்கள், புலனாய்வுக் குழுவினர் என தொடர்ச்சியாக வந்து என்னை மிரட்டினர். தற்போது மீண்டும் இந்த அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால், சுதந்திரமாக வாழமுடியாத துப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன். சமூக சேவை செய்யத் தடை ஏற்பட்டுள்ளது. உளவியல் ரீதியான தாக்கம் அதிகமாக உள்ளது. குடும்பமும் அச்சத்தில் உள்ளனர். (அ)

## இன்று பஸ் சேவை சந்தேகம்!

கொழும்பு, ஜூன். 07

நாடளாவிய ரீதியாக நேற்று மூன்றில் ஒரு பங்கு பஸ்களே சேவையில் ஈடுபட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இன்று பஸ் சேவை இடம் பெறுவதில் நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை காரணமாக கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பிரிவு சேவையாளர்கள் நேற்று அசௌகரியத்துக்கு முகங்கொடுத்தனர். (அ)

## உயர்தர மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 07

டான் தொலைக்காட்சி குழுமத்தின் கல்வி தொலைக்காட்சி -1இல் உயர்தர மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்தும் விதத்தில் கற்பித்தல் சேவை ஆரம்பமாகியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை ஆரம்பமான இந்த சேவையில், தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை உயர்தர மாணவர்கள் பார்த்துப் பயனடைய முடியும்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் மாலை 5 மணிக்கு நாடகமும் அரங்கியலும் பாடங்கள் ஒளிபரப்பாகும்.

நாளை புதன்கிழமை வரலாறு, அரசியல் பாடங்களும், வியாழக்கிழமை கணக்கீடு, உயிரியல், வெள்ளிக்கிழமை பௌதிகவியல், வணிகக்கல்வி பாடங்களும், சனிக்கிழமை தமிழ், பொருளியல் பாடங்களும், ஞாயிற்றுக்கிழமை இரசாயனவியல், இணைந்த கணிதம் பாடங்களும் ஒளிபரப்பாகவுள்ளன. (ஐ)

## எரிபொருள் விலை உயரும்?



கொழும்பு, ஜூன் 07

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக ஜூன் மாத நடுப்பகுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என ஐக்கிய தொழிற்சங்க அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

மே 24ஆம் திகதி மின்சக்தி அமைச்சர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் இரண்டு வாரங்களில் எரிபொருள் விலையேற்றம் இருக்கும் என அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எனவே மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களின் விலையை அதிகரிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் கருத்தின் பிரகாரம், எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததையடுத்து, மே மாதம் 24 ஆம் திகதி விலையில் திருத்தம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டது.

தற்போதைய எரிபொருள் விலைச் சூத்திரம் மறைந்த நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தியதைப் போன்றது. இது ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. ஆனால் தற்போதைய சூத்திரத்தின்படி எரிபொருள் விலை உலக சந்தை விலைக்கு ஏற்ப அமுலுக்கு வரும்" -என்றார். (அ)

## இலங்கை கிரிக்கெட் மக்களுக்கு நன்கொடை

கொழும்பு, ஜூன் 07

இலங்கை மக்களுக்கு நன்கொடையாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய சுற்றுப்பயண கிரிக்கெட் தொடருக்கான ரிக்கெட்டுகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளர் மொஹான் டி சில்வா, அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் மூலம் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை எதிர்பார்த்துள்ளதாகவும், ரிக்கெட்டுகள் விற்பனை மூலம் கிடைக்கும் முழுப் பணத்தையும் பொதுமக்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கைக்கான அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் முடிந்தவுடன் பாகிஸ்தான் விரைவில் நாட்டுக்கு வரும் என்றும் அதன் பின்னர் கொழும்பில் ஆசிய கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பொலிஸாருக்கான எரிபொருள் அளவை 20 வீதத்தினால் குறைக்குமாறு பணிப்பு!

கொழும்பு, ஜூன் 07

பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவை 20 வீதத்தால் குறைக்குமாறு பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த சுற் றறிக்கை வெளியிடப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

Eelanadu
07.06.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஒரு பயங்கர வன்முறையை நோக்கி...?

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கு உடனடியாக தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டுமென, ஜே. வி. பி கோரியுள்ளது. இவ்வாறானதொரு கோரிக்கையை ஏற்கனவே தமிழ்த் தேசிய கட்சிகளும் முன்வைத்திருந்தன. தென்னிலங்கையின் அரசியல் தொடர்ந்தும் குழப்ப நிலையில் சிக்கிருக்கின்றபோது, தேர்தலுக்கான கோரிக்கை எழுவது சதாரணமான ஒன்றுதான். ஆனால், பிரச்னை, புதிதாக நாட்டை பொறுப்பேற்பவர்களிடம், நாட்டை மீட்பதற்கு எவ்வாறான திட்டம் இருக்கின்றது? எனவே, எவர் ஆட்சியைப் பொறுப்பேற்றாலும் சர்வதேச உதவிகளின்றி, நாடு முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

ஆனால், சர்வதேச உதவிகளும் எதிர்பார்க்கும் வகையில் சாத்தியப்படப் போவாதில்லை. இந்த நிலையில், தேர்தல் இடம்பெற்றாலும் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. அடுத்தது, தற்போது மக்கள் வாழும் சூழலில், தேர்தலொன்று இடம்பெறுமாக இருந்தால் – அதனை மக்கள் எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பதும் இன்னொரு கேள்வி. ஆளுக்கட்சியை எதிர்ப்பார்க்கள் என்பது ஒரு பொதுவான பார்வை. நிச்சயம் எதிர்ப்பார்கள் – ஆனால், எந்தவொரு அரசியல்வாதிகள் மீதும் பிரத்தியேக நம்பிக்கை வைக்கக்கூடிய நிலையில், தற்போது மக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகள் மீதான வெறுப்பே மேலோங்கியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது, இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதும் இயல்பானதுதான். எனவே, தேர்தலொன்றையும் நினைப்பதுபோல் இலகுவாக நடத்திவிட முடியாது.

ரணில் தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் இழுபறிகளை சந்திக்குமாக இருந்தால், தேர்தலுக்கான கோரிக்கையே வலுவடையும். இது சாதாரணமான ஒன்றுதான். அதாவது, இருக்கின்ற அரசாங்கத்தால் விடயங்களை முன்கொண்டு செல்ல முடியாமல் போகும் போது, மக்கள் புதிய அரசாங்கமொன்றை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இதுவே, ஜனநாயக நடைமுறையாகும்.

ரணில் தலைமையில், 21ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அது இழுபறியை சந்திக்குமானால் அல்லது தோல்வியடையுமாக இருந்தால் நிலைமைகள் மோசமடையலாம். ஏனெனில், அரசாங்கம் மக்கள் மத்தியிலான ஓரளவு நம்பிக்கையும் இழந்து போகும். இந்த நிலையில், 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவது, ரணில் விக்கிரமசிங்கவை, பொறுத்தவரையில் தலையாய ஒன்றாகும். 21ஆவது திருத்தச் சட்டம்தான் அரசாங்கத்துக்கான இறுதி அஸ்திரம்.

ஆனால், அதிலும் சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. குறிப்பாக, பஸில் ராஜபக்ஷ தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கான சூழ்ச்சி அரசியிலில் ஈடுபட முயற்சிக்கிறார் என்று பரவலாகக் கூறப்படுகின்றது. இதனை ரணில் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் – அவரால் சமாளிக்க முடியுமா என்பதில்தான் நாட்டின் அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படப் போகின்றது. ஒரு குடும்பம் – ஒரு சில தனிநபர்களின் அரசியல் இருப்பு என்னும் அடிப்படையில்தான், இலங்கையின் பாராளுமன்றம் இயங்கப் போகிறது என்றால், நிச்சயம் குழப்பங்களே மிஞ்சும். ஆனால், இனியொரு குழப்பம் ஏற்பட்டால், அது முன்னரைப் போல் இருக்காது. நாடே மோசமான வன்முறை ஒன்றுக்குள் மூழ்க நேரிடும்.

அரசியல்வாதிகள் பொறுப்பாக செயல்படாதபோது, அதற்கான விலையை நாட்டு மக்களே கொடுக்க நேரிடும். மக்கள் விலைகொடுக்கும் போது, மக்கள் அமைதி இழப்பர். இதனால் நாடு ஒருபோதும் எதிர்பாராத பாரதூரமான விலையை கொடுக்க வேண்டிய சூழலே இறுதியில், உருவாகும். ஒருவேளை ரணில் தலைமையிலான முயற்சிகள் தோல்வியுறுமாக இருந்தால், நிச்சயம் நாடு அமைதியிழக்கும். அதன் பின்னர், எந்த மீட்பராலும் எதனையும் செய்ய முடியாமல் போகலாம்.

# 21ஆவது திருத்தச் சட்டம் !



**அலசுவது இராஜதந்திரி**

*21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான சர்வமத தலைவர்களின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுமுன் தினம் கொழும்பில் இடம்பெற்றிருந்தது. இந்தச் சந்திப்பில் பங்கு கொண்ட சர்வ மதத் தலைவர்கள் 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கேட்டிருந்தனர்.*

*21ஆவது திருத்தச்சட்டம் குறித்து நோக்குகையில் “பூனைக்கு மணிகட்டுவது யார்? என்பது போல அந்தத் திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை “நறுக்கி“ விடுவதில் பெரும்பாலானவர்கள் விருப்புக் கொண்டுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.*

*1978ஆம் ஆண்டு காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்டிருந்த நிறைவேற்றதிகாரத்துடன் கூடிய அரசியலமைப்பு ஒரு தவறான கரங்களுக்கு சென்றுவிட்டால் அதனால் பாதகமான விளைவுகளுக்கு இடமுண்டு என்பதனை ஜே. ஆர். ஜெயவர்த்தனவே குறிப்பிட்டிருருந்தார். எனவே, அவர் குறிப்பிட்டது போன்ற ஒரு நிலவரமே தற்போது நிலவுகின்றது.*

*ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் நிறைவேற்றதிகாரம் சர்வாதிகார போக்குடையதென்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் இடையறாது பிரசாரம் செய்து வந்தனர். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியைவிட நெடுங்காலம் நிறைவேற்று அதிகாரத்தின் பலாபலன்களை அனுபவித்திருப்பது சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினரே.*

*இத்தகைய பின்னணியில் தற்போது நிறைவேற்று அதிகாரத்தை முற்றுமுழுதாக நீக்குவதென்று குறிப்பிடாது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் விதத்திலேயே 21ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியாவார். இருந்தபோதிலும் வடமராட்சி இராணுவ நடவடிக்கை இடம்பெற்றபோது இராணுவத்திலிருந்தும் இடைநடுவில் பதவி விலகி அமெரிக்காவுக்குச் சென்று அங்கே குடியுரிமை பெற்று வாழத்தொடங்கினார். அவரைப்போலவே அவரின் சகோதரரான பஸில் ராஜபக்ஷவும் அமெரிக்க குடியுரிமை பெற்றவராவார்.*

*1987ஆம் ஆண்டு வடமராட்சி இராணுவ நடவடிக்கையை தாக்குப்பிடிக்க முடியாது நாட்டைவிட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ , தற்போது பொருளாதார நெருக்கடியை சீரமைக்க முடியாத நிலையில் தொடர்ந்தும் என்ன காரணத்துக்காக பதவியிலிருந்து வருகின்றார்? என்ற கேள்வியே எழுவதோடு அவர் பதவி விலக வேண்டுமென்று காலிமுகத்திடல் “கோட்டா கோ கம“ வில் தற்போது 50 நாட்களுக்கும் மேலாக குரல் எழுப்பப்பட்டும் வருகின்றது.*

*அரசியலமைப்பு தற்போது 21ஆவது திருத்தச் சட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது. இந்த வேளையில் இலங்கையில் தனிநாட்டு கோரிக்கையை தடைசெய்து ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது இன்றைய அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டமே என்பது குறிப்பிடத்தக்கது.*

*21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், 21ஆவது திருத்தச்சட்டம் தோற்கடிக்கப்படுமேயானால் அதன் பின் விளைவுகள் மேலும் நாட்டில் பிரச்னைகளை தோற்றுவிப்பதாகவே அமையும்.*

*ஒரு காலை இலங்கையிலும் மற்றொரு காலை மற்றொரு நாட்டிலும் இரட்டை பிரஜாவுரிமை மூலம் பஸில் ராஜபக்ஷ மட்டும் கொண்டிருக்கவில்லை. வேறு அநேக பாராளுமன்ற உறுப்பினர்களும் இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களாகவும் தாம் பிரஜாவுரிமை பெற்றுள்ள நாடுகளில் வர்த்தக, தொழில் நடவடிக்கைகள் குறித்த தொடர்புகளைக் கொண்டிருப்போராகவும் இருந்து வருகின்றனர்.*

*அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அமைச்சுகளின் செயலாளர்கள், சிரேஷ்ட படை அதிகாரிகள் ஆகியோரும் இரட்டை பிரஜாவுரிமை கொண்டோராக இருக்கின்றனர்.*

*இலங்கையில் தற்போது அத்தியாவசிய பொருட்கள், சேவைகளின் விலையேற்றத்துடன் இக்கட்டான பொருளாதார நிலவரம் காணப்படுகின்றது. இத்தகைய உறுதிப்பாடற்ற பொருளாதார நிலவரத்தை சீர்செய்ய உறுதியான அரசியல் அமைப்பு அவசியமானதாகின்றது.*

*“சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரைய முடியும்“ . எனவே தளம்பலான அரசியல் சூழ்நிலையில் நேர்த்தியான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.*

*இலங்கையின் இன்றைய அரசியல் நெருக்கடி குறித்து சர்வதேச சமூகம் இலங்கையர்களைவிட நன்கறிந்து வைத்துள்ளது. எனவே, சர்வதேச சமூகமும் இலங்கையில் அரசியல் உறுதிப்பாட்டையே எதிர்பார்க்கின்ற நிலையில் 21ஆவது திருத்தச்சட்டம் ஓர் உறுதியான அரசியல் நிலைப்பாட்டுக்கு வழிவகுப்பதன் மூலமே மோசமான சூழ்நிலைகளில் இருந்து நாடு விடுபட முடியும் எனக்கருதலாம்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூன் - 07 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 24
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அஷ்டமி




**மேடம்**
முயற்சியில் கவனம் தேவை. பணியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். ஆனால் நீங்கள் நினைப்பதற்கு எதிரான முடிவையே காண்பீர்கள். புதிய முயற்சி வேண்டாம். சுமாரான நாள்.

**இடபம்**
அரசு விஷயத்தில் எச்சரிக்கை தேவை. பணியாளர்களுக்கு அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். வழக்கமான செயல்களில் நிதானம் தேவை. தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்**
நீண்ட நாள் முயற்சி இன்று நிறைவேறும். பண வரவால் பொன் பொருள் வாங்குவீர்கள்.தடைபட்ட முயற்சி நிறைவேறும். வெளியூர் செல்ல நேரிடும். நீங்கள் ஈடுபட்ட செயலில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
பண விஷயத்தில் கவனம் தேவை. முயற்சி நிறைவேற விட்டுக் கொடுத்து செல்வது அவசியம். முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். உறவுகள் உதவியாக இருப்பார்கள்.

**சிம்மம்**
எண்ணம் இன்று நிறைவேறும். பணியாளர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். மனதில் பல சிந்தனைகள் உண்டாகி குழப்பத்தை ஏற்படுத்தும்.நண்பர்கள் ஆதரவுடன் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி**
எதிர்பாராத செலவு உண்டாகலாம். அலைச்சல் அதிகரிக்கும். செயலில் கவனம் தேவை.குடும்பத்தினரால் தொல்லைகளை சந்திப்பீர்கள். வார்த்தையில் கவனம் தேவை. செலவு கூடும்.

**துலாம்**
நெருக்கடியில் இருந்து விடுபடுவீர்கள். பணவரவு கூடும். நினைத்ததை இன்று முடிப்பீர்கள்.மனதில் புதிய சிந்தனை உண்டாகும். புத்திசாலித்தனம் வெளிப்படும். முயற்சி நிறைவேறும்.

**விருட்சிகம்**
பணியிடத்தில் செல்வாக்கு உயரும். தொழிலை மாற்றி அமைக்கவோ விரிவு செய்யவோ முயற்சிப்பீர்கள். எண்ணம் நிறைவேறும். குரு அருளால் முயற்சி வெற்றியாகும். நல்ல தகவல் வரும்.

**தனுசு**
முயற்சிகள் இன்று தாமதமாக நிறைவேறும். அறிவாற்றலால் பிரச்னைகளை சமாளிப்பீர்கள். தடைகளை தாண்டி வெற்றி பெறுவீர்கள்.பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும்.

**மகரம்**
தடைகளும் தாமதமும் உண்டாகும். மனதில் தேவையற்ற குழப்பங்கள் வந்து செல்லும்.செயல்களில் இன்று சிரமங்களைக் காண்பீர்கள். உறவினர்களால் பிரச்னை குறுக்கிடலாம்.நிதானம் தேவை.

**கும்பம்**
இனிய சம்பவங்களால் மகிழ்வீர்கள். யோகமான நாள்.வாழ்க்கைத் துணை வழியே எதிர்பார்ப்பு நிறைவேறும். பண வரவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். முயற்சியில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மீனம்**
முயற்சிகள் இன்று தாமதமாக நிறைவேறும். அறிவாற்றலால் பிரச்னைகளை சமாளிப்பீர்கள். தடைகளை தாண்டி வெற்றி பெறுவீர்கள்.பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும்.

# இந்து மதத்தை காப்பதற்கு சபதம் எடுக்க வேண்டும்!

## விஸ்வ இந்து பரிஷத்



சென்னை, ஜூன் 07

இந்து தர்மத்தைப் பாதுகாக்க சபதம் எடுக்க வேண்டும் என விஸ்வ இந்து பரிஷத் அகில உலக பொதுச்செயலாளர் மிலிந்த் ப்ராண்டே பேசினார்.

விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் அறவழி காட்டும் ஆன்றோர் பேரவை சார்பில் துறவியர் மாநாடு மதுரையில் நடந்தது.

தருமபுர ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தலைமை வகித்தார்.

"கிறிஸ்தவ, முஸ்லிம் புனித தலத்துக்கு செல்வதற்கு இலவசம் அறிவிக்கும் அரசு, இந்துக் கோயில்களில் மட்டுமே தரிசனம் செய்ய கட்டணம் வசூலிக்கின்றனர். வரும் தேர்தலில் இந்துக்கள் கைலாயம் செல்வதற்கு இலவசம் என்பவர்களுக்கே நமது வாக்கு", என்று அவர் தனது தலைமை உரையில் கூறினார்.

விஸ்வ இந்து பரிஷத் அகில உலக பொதுச்செயலாளர் மிலிந்த் ப்ராண்டே பேசுகையில்,

தமிழகத்தில் பயங்கரமான சூழல் உள்ளது. இந்துக்கள் மாற்று சமுதாயத்தினரால் அழிக்கப்படுகின்றனர். இந்துக்கள் தம்மை தற்காத்துக் கொள்ள தயாராக இருக்க வேண்டும். கிழக்கு ஆசிய நாடுகளில் இந்து மதம் பரவியுள்ளது. கம்யூனிஷ சித்தாந்தம் பேசுபவர்கள், நாத்திகர்கள் ஆகியோர் இந்து மதம்மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இங்கிருந்து ஆன்மிக வேண்டுகோள் விடுக்கிறேன், இந்து தர்மத்தை பாதுகாக்க சபதம் எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 500 கிலோ கடல் அட்டைகள் சிக்கின!

இராமேஸ்வரம், ஜூன் 07


இலங்கைக்கு கடத்துதவற்காக தனுஷ்கோடியில் தென்னந்தோப்பு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 500 கிலோ கடல் அட்டைகளை வனத் துறையினர் பறிமுதல் செய்தனர்.

கடல் அட்டைகளை இலங்கைக்கு கடத்துவதற்காக தென்னந்தோப்பில் பதுக்கப்பட்டுள்ளன என்று வனத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்த தென்னந்தோப்பில் வனத்துறையினர் நேற்று முன்தினம் சோதனை நடத்தச் சென்றனர். அவர்களை பார்த்ததும் தென்னந்தோப்பில் இருந்த அனைவரும் தப்பி ஓடிவிட்டனர்.

அங்கு சோதனை நடத்திய வனத்துறையினர், பதப்படுத்தப்பட்ட நிலையிலிருந்த 500 கிலோ எடை கொண்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்தனர். கடல் அட்டைகளை பதுக்கி வைத்திருந்த கடத்தல்காரர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர். (ஐ)



# முருகன் சிறை விடுப்பு வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்!



சென்னை, ஜூன் 07

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள முருகனுக்கு சிறை விடுப்பு வழங்க கோரி அவரின் மனைவி நளினி தமிழக அரசுக்கு விண்ணப்பித்து இருந்தார்.

இந்த விண்ணப்பம் பரீசிலிக்கப்படவில்லை எனக்கூறி மருத்துவ காரணங்களுக்காக அவருக்கு 6 நாட்கள் சிறை விடுப்பு வழங்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் வைத்தியநாதன், ஜெகதீஸ் சந்திரா ஆகியோர் விசாரித்தனர். சிறையில் அவர்மீது குற்ற வழக்குகள் உள்ளதால் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக அரசு சார்பில் முற்பட்ட வழக்குரைஞர் தெரிவித்தார்.

மேலும், சிறை விடுப்பு விண்ணப்பம் நிராகரிப்பை எதிர்த்து சிறைத்துறை டி.ஐ.ஜியிடம் மேல் முறையீடு செய்யலாம் என நீதிபதி தெரிவித்தனர். இதனையடுத்து மனுவை மீளப் பெறுவதாக நளினி தரப்பு வழக்குரைஞர் தெரிவித்தார். இதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். (ஐ)

# கிராமங்களில்கூட கஞ்சா விற்பனை வழக்கமாகிவிட்டது!

## - நாம் தமிழர் கட்சி கவலை -

சென்னை, ஜூன் 07

ஏற்கெனவே, மதுபானங்களை அரசே விற்பதன் மூலம் தமிழகக் குடும்பங்களைச் சீரழித்தது போதாதென்று, தற்போது கஞ்சா பயன்பாட்டைக் கட்டுப்படுத்த தவறி, வளரிளம் தலைமுறைகளின் எதிர்காலத்தையே அழித்தொழிக்கும் தி. மு.க. அரசின் அலட்சியப்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "தமிழகத்திலுள்ள பெருநகரங்கள் முதல் சிறுகிராமங்கள் வரை கஞ்சா விற்பனை கட்டுக்கடங்காது அதிகரித்து வருவது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

தமிழகத்தில் ஒவ்வொருநாளும் கிலோ கணக்கில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதும், அதனால் அதிகளவில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகின்றனர் என்பதும் மிகுந்த கவலையையும், வேதனையையும் அளிக்கிறது.

கடந்த காலங்களில் பெருநகரங்களில் மிக மிக ரகசியமாக மட்டுமே கஞ்சா விற்பனை மற்றும் பயன்பாடு என்றிருந்த நிலைமாறி, தற்போது தமிழகத்தின் சிறிய கிராமங்களில்கூட மிக சாதாரணமாக கஞ்சா விற்பனை செய்யப்படுவது தமிழிளந்தலைமுறையினரின் எதிர்காலம் குறித்த மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்துகிறது- என்றுள்ளது. (ஐ)



## வவுனியாவில் தீப்பற்றி எரிந்தது சூரிய மின் உற்பத்தி நிலையம்!

வவுனியா, ஜூன் 07

வவுனியா கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு தீப்பரவல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையத்திலேயே திடீரென இவ்வாறு தீப்பற்றியது.

இதன்போது அந்த நிலையத்தில் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய ஒளி மின் உற்பத்தி உபகரணங்கள் தீப்பற்றி எரிந்தன.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய மின்கலங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நகரசபையின் தீயணைப்புப் பிரிவுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.(அ)

# 1 கிலோ அரிசியின் விலை 500 ரூபாய்?

கொழும்பு, ஜூன் 07

**நாட்டில் எதிர்வரும் சில வாரங்களில் ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாயாக உயரும் நிலை காணப்படுவதாக அனுராதபுரம் மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

உணவுப் பற்றாக்குறை, நெல் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு போன்றவற்றால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில்தமது தொழில் துறையும் பாரிய ஆபத்தில் உள்ளதாக சங்கத்தின் தலைவர் யு.கே.சேமசிங்க தெரி வித்தார்.

நடுத்தர மக்கள் தற்போது கிராமங்களில் இருந்து 10 முதல் 15 மூடை நெல் கொள்வனவு செய்வதாகவும் சிறிய நெல் ஆலை உரிமையாளர்கள் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்ய நெல் போதுமானதாக இல்லை என்றும் குறுகிய காலத்தில் அரிசியின் விலை சுமார் 500 ரூபாய் வரை உயரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சிமெந்து பைக்கெற் ஒன்றின் விலை 4000 ரூபாவாகிறது?

கொழும்பு, ஜூன் 07

எதிர்காலத்தில் சிமெந்து மூடை ஒன்றின் விலை 4000 ரூபாயை தாண்டும் என தேசிய கட்டுமானச் சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்புடன் சிமெந்து விலையும் அதிகரிக்கும் என அந்தச் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சிமெந்து மூடை ஒன்றின் விலை 3000 ரூபாயை அண்மித்துள்ளதாகவும் தேசிய கட்டுமானச் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் வரி அதிகரிப்பினால் சிமெந்து விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## நாணய நிதியத்திடம் கடன் வாங்கிய எந்தவொரு நாடும் உருப்படவில்லை!

### அத்துரலிய ரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 07

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் பெற்ற எந்தவொரு நாடும் சுபீட்சமடையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றிருந்தது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார நிலைமை நெருக்கடிக்குள்ளாகத் தொடங்கியதும் சிலர் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும், உலக வங்கியிடம் செல்ல வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தினர்.

இன்னும் சிலர் ரணில் பிரதமராக வந்தபோது அவரால் இந்தப் பிரச்னையில் இருந்து நாட்டை மீட்க முடியும் என்று குறிப்பிட்டனர்.




அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாங்களும் ஒதுங்கி நின்று அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தோம்.

ஆனால் அவர்களினால் எதுவும் முடியாது என்பது தற்போது புலனாகியுள்ளது.

அத்துடன் இந்த உலகம் ஒன்றும் அட்சய பாத்திரம் கிடையாது. அள்ளி அள்ளி யாரும் தரவும் மாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்ற எந்தவொரு நாடும் முன்னேற்றமடைந்தது கிடையாது. அதற்குப் பதிலாக இன்னு மின்னும் அடிமைத்தனத்தில் சிக்கிக் கொண்டது தான் மிச்சம்-என்றார். (அ)

## பிரதமர் ரணிலின் அழைப்பை ஏற்ற முன்னாள் சபாநாயகர்!

கொழும்பு, ஜூன் 07

புதிய பாராளுமன்றக் குழுவொன்றை அமைப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு விடுத்த அழைப்பை, அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் கரு ஜயசூரியவுக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் சந்திப்பு இடம்பெற்று இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தின் மேற்பார்வைக் குழுக்களை வலுப்படுத்துவதுடன், இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக, குறித்த பாராளுமன்றக் குழுவை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## ரஷ்ய விமான பிரச்னை இராஜதந்திர சிக்கலல்ல!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

ரஷ்ய ஏரோபுளொட் விமானம் தொடர்பான பிரச்னை இராஜதந்திர பிரச்னையல்ல என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரஷ்ய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய ஏரோபுளொட் விமானம் தொடர்பான பிரச்னை தனிப்பட்ட சட்டப் பிரச்னை என்றும், இந்த விவகாரத்தை விரைந்து தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நீதி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரஷ்யாவுக்கு அறிவித்துள்ளார்.

ஏரோபுளொட் விமான சேவை நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட செலிஸ்ரியல் ஏசியேசன் ரேடிங் நிறுவனத்துக்கு இடையே வணிகப் பரிவர்த்தனை தொடர்பாக ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என



அதில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்ய விமானம் ஒன்றுக்கு சொந்தமான எம்.எஸ்.என். 1301 என்ற விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட விடாது கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அண்மையில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

செலிஸ்ரியல் ஏசியேசன் ரேடிங் நிறுவனம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் ராஜதந்திர ரீதியான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

## இலங்கைக்கு உருளைக்கிழங்கு வழங்குகின்றது பங்களாதேஷ்

கொழும்பு, ஜூன் 07

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் உணவுப் பற்றாக்குறையை ஈடு செய்ய உதவும் வகையில் உருளைக்கிழங்கை அனுப்புவது குறித்து பங்களாதேஷ் பரிசீலித்து வருகிறது.

சார்க் செயலாளர் நாயகம் எசல ருவான் வீரக்கோனுடனான சந்திப்பின்போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பங்களாதேஷ் பிரதமரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சார்க் செயலாளர் நாயகம் எசல ருவான் வீரகோன் மரியாதை நிமித்தமாக நேற்று முன்தினம் சந்தித்ததாக டாக்கா ட்ரிப்யூன் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு கோவிட் தொற்று நோய் தான் காரணம் என்று கூறிய வீரக்கோன், பங்களாதேஷ் இலங்கைக்கு அளித்து வரும் ஆதரவை பாராட்டினார்.

இலங்கையில் அரிசி உற்பத்தி 50 வீதம் குறைந்துள்ளதால் நாட்டுக்கு தற்போது உரம் தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் உணவுப் பற்றாக்குறையை ஈடுசெய்ய உதவும் வகையில் இலங்கைக்கு உருளைக்கிழங்கு வழங்கலாம் என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

கோவிட் -19 தொற்றுநோய் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போரைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினைக்கு மத்தியில் அதிக உணவு, தானிய பயிர்ச்செய்கையில் பங்களாதேஷ் ஆர்வம் காட்டி வருவதாகவும் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

உவர் நிலம் மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடிய நெல்லினங்களை உருவாக்கி விவசாயச் செய்கயை மேம்படுத்த பங்களாதேஷ் ஆராய்ச்சியாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் ஷேக் ஹசீனா கூறினார். (அ)

ஈழநாடு



# இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்யவேண்டும்

## தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன். 07

இந்தியாவின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்களை விடுதலை செய்யவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கோரியுள்ளார்.

இதற்கான நடவடிக்கையை தமிழக முதலமைச்சர் எடுக்கவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கூறினார்.

தமிழக சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களது விடுதலையை வலியுறுத்தி நேற்று முன்தினம் 17ஆவது நாளாகவும் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், அவர்களது உடல் நிலையை கருத்திற்கொண்டு தமிழக முதலமைச்சர் உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என செல்வராசா கஜேந்திரன் கேட்டுக்கொண்டார். (அ)

# சமூக வலைத்தள குரல்களை வரிகள் மூலம் முடக்க முயற்சி

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன்.07**

**வரி அறவீடுகள் மூலம் சமூக வலைத்தள ஊடகங்கள் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



இதன் ஊடாக சமூக வலைத்தள பாவனையை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

போராட்டங்களின் குரலை முடக்கியதைப் போன்று சமூக வலைத்தளங்களின் குரல்களையும் முடக்கும் நடவடிக்கையே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்போது சில வைத்தியசாலைகளில் உணவுப் பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

பிரச்னைகளுக்கு தீர்வை வழங்குவதாக தெரிவித்து பொறுப்பேற்றவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார். (அ)

# இருவேளை சாப்பிட பழகுமாறு கூற நாட்டுக்கு ஒரு பிரதமர் தேவையா?

## அனுரகுமார திஸநாயக்க கேள்வி

கொழும்பு, ஜூன். 07

மக்களிடம் இரண்டுவேளை மட்டும் சாப்பிட பழகிக்கொள்ளுங்கள் எனக் கூறும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இந்த நெருக்கடியை உருவாக்கியவர் யார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த மாட்டார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நெருக்கடியை உருவாக்கியவர்களை ரணில் விக்ரமசிங்க மறைத்து வருவதாகவும் இரண்டு வேளை சாப்பிட பழகிக்கொள்ளுங்கள் எனக் கூற ஒரு பிரதமர் தேவையா என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இளைஞர்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள். மஹிந்த ஒரு திருடன், தங்கள் எதிர்காலம் பாழானது, எனவே, மஹிந்தவை வீட்டுக்கு செல்ல வேண்டும் என கூறினார்கள்.

இவ்வாறு ராஜபக்ஷக்கள் சிக்கிய பின்னர் ரணில் ராஜபக்ஷக்களை காப்பாற்ற பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். பிரதமர் பதவிக்கு துரோகம் செய்து மறைந்திருந்த ராஜபக்ஷக்களை வெளியில் வர ரணில் அனுமதித்தார்.

இப்போது பழைய தோல்வியடைந்த



அரசியல்-பொருளாதாரப் பயணம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பயணம் மிகக் குறுகியதாக இருக்கவேண்டும். ரணில் இன்றைக்கு நெருக்கடி நிலையின் பேச்சாளராக மாறி, இனிமேல் ஒரு நேரம்தான் சாப்பிட வேண்டும் என்கிறார். இன்னும் ஒரு வாரத்துக்குத்தான் எண்ணெய் இருக்கிறது என்கிறார்.

எரிவாயு மற்றும் எண்ணெய்க்காக மக்கள் வரிசையில் நிற்கின்றனர். பெற்றோர்கள் வரிசையில் நின்று இறக்கின்றனர். சாலைகளில் வாகனங்கள் இல்லை. நெல் வயலை உழுவதற்கு எண்ணெய் இல்லை. மக்களை அழித்த பிறகு இரண்டு வேளை சாப்பிட பழகிக்கொள்ளுங்கள் என்கிறார் ரணில். அதைச் சொல்ல ஒரு பிரதமர் தேவையா?-என்றார். (அ)

# நாவலப்பிட்டியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட12 பேர் கைது!

கொழும்பு, ஜூன். 07

நாவலப்பிட்டி நகரில் நீண்ட காலமாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார், கம்பளை பொலிஸார் மற்றும் கம்பளை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின் போதே, இந்த 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பிரதான சந்தேகநபர் ஒருவரும், 11 போதைப்பொருள் வர்த்தகர்களும் உள்ளடங்குவதாக, விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தேயிலை ஏலத்தை டொலரில் நடத்துவது சாத்தியம் அல்ல!

கொழும்பு, ஜூன். 07

கடந்த பல மாதங்களாக இருந்து தேயிலை ஏற்றுமதி சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளதுடன், தேயிலையை ஏலம் டொலரில் நடத்துவது நடைமுறைக்கு சாத்தியம் அல்லது என தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இது பற்றி கருத்து தெரிவிக்கையில்-

உரப்பிரச்னை காரணமாக தேயிலை உற்பத்தி கணிசமானளவு குறைந்துள்ளமையே இதற்கு காரணம்.

தேயிலை ஏற்றுமதியில் ஏற்றுமதியாளர்களுக்கு பணம் செலுத்த வாங்குபவர்களுக்கு 180 நாட்கள் உள்ளன. ஆனால், தேயிலை ஏலத்தில் ஏற்றுமதியாளர்கள் தேயிலையைப் பெற்றால், வியாபாரிகளுக்குக் கட்டணம் செலுத்துவதற்கு ஒரு வாரம் மட்டுமே உள்ளது.

மேலும், பல சேவை வழங்குனர்களுக்கு டொலரில் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். தேயிலை ஏலத்தை டொலரில் நடத்தினால், பணம் செலுத்துவதற்கு தேவையான டொலர்களை பெறுவது கடினமாக இருக்கும்.

நாட்டுக்கு அதிக டொலர்களை வரவழைக்கும் வகையில் தேயிலை ஏலத்தை டொலரில் நடத்தாமல் தேயிலை உற்பத்தியை அதிகரிக்க வசதி செய்யவேண்டும்.

உள்ளூர் தேயிலை ஏலத்தில் சுமார் 300 தேயிலை ஏற்றுமதியாளர்கள் பங்கேற்கின்றனர். வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் ஏலம் நடைபெறும். நாட்டின் தேயிலை உற்பத்தியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலக அளவில் கிட்டத்தட்ட 40 நாடுகளுக்கு இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தேயிலை ஏற்றுமதி தொடர்ந்து வெற்றிபெற வேண்டுமானால், அதிகாரிகள் உரிய நேரத்தில் இத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டும்-என்றார். (அ)

# மர்மமான முறையில் உயிரிழந்த ஆணின் சடலம் ஹோமாகமவில்!

கொழும்பு, ஜூன். 07

ஹோமாகம பிரதான பஸ் நிலையத்திற்கு பின்புறம் உள்ள கால்வாயில் மர்மமான முறையில் உயிரிழந்த ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

119 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த தகவலின்படி, சுமார் 8 அடி ஆழமுள்ள கால்வாயில் இருந்து சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக்கத்தக்கவர் என்றும் எனினும் அவர் குறித்து, இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இது கொலையா அல்லது கால்வாயில் விழுந்து இறந்துள்ளாரா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# காஸ் விலை உயர்வு குறித்து இன்னும் தீர்மானம் இல்லை

கொழும்பு, ஜூன். 07

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான சமூக ஊடக அறிக்கைகளை நிராகரித்த லிட்ரோ நிறுவனம், எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரிப்பதற்கு இன்னும் தீர்மானிக்கவில்லை என தெரிவித்துள்ளது.

இதேவேளை, 12.5 கிலோ, 5 கிலோ மற்றும் 2.3 கிலோ எடையுள்ள வீட்டு எரிவாயு சிலிண்டர்கள் நாளை புதன்கிழமை வரை விநியோகிக்கப்பட மாட்டாது என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கையில் போதிய கையிருப்பு இல்லாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் எரிவாயு கொண்டு வரும் சரக்குக் கப்பல் விரைவில் நாட்டுக்கு வரவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)



# கச்சதீவை இந்திய அரசு கையகப்படுத்தமுடியாது

அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 07

**கச்சதீவு என்பது ஒரு மீனவர்களின் பிரச்சனை அல்ல. எமது நாட்டிலுள்ள வளம் மிக்க ஒரு தீவு. எனவே எமது நாட்டில் உள்ள ஒரு தீவை கையகப்படுத்துதை-சூறையாடுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் வீ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த சூழ்நிலையில் தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு அரசு எமக்கு உதவி செய்வதுபோல் உதவி செய்து உதவிப் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு அந்த சந்தர்ப்பத்தில் கச்சதீவு பிரச்சனையை ஒரு முக்கியமாக எடுத்துக்கொண்டு இருப்பது கோபத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். மோடி தமிழகத்துக்கு வந்தபோது தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அங்கு ஒரு வேண்டுகோளையும் வைத்திருந்தார். கச்சதீவை மீளப் பெறுவதற்கு இது ஒரு தகுந்த தருணம் என்று அவர் கூறியிருந்தார். அப்படியானால் நமது நாடு வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. செய்வதறியாமல் தவித்து கொண்டு இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எரிகிற வீட்டில் பிடுங்குவது போல மு. க ஸ்டாலின் இந்த கச்சதீவு விடயத்தை பிடுங்கி எடுக்கலாம் என யோசிக்கிறார். அதை ஒருபோதும் ஏற்க முடியாது. அது ஒரு மிகவும் மோசமான முடிவாகும் .

மு.க.ஸ்டாலின் தனது கருத்தை முழுமையாக பரிசோதனை செய்து இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையிலான இழுவை மடி பிரச்னையை கையில் எடுத்து அதற்கு முதல் தீர்வு காணவேண்டும்-என்றார். (அ-03)

# வெதுப்பக உணவுகளின் விலை மேலும் உயரும்?

கொழும்பு, ஜுன் 07

எதிர்காலத்தில் பனிஸ் உட்பட வெதுப்பக உணவுகளுக்கான விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ரொட்டி தவிர்ந்த அனைத்து பேக்கரிப் பொருட்களுக்கும் வெதுப்பக உரிமையாளர்கள் 12 சதவீத வற் வரி செலுத்த வேண்டியிருப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வற் வரியை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒரு பனிஸின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறு பேக்கரி உரிமையாளர்களுக்கு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டாலும், அனைத்து வெதுப்பக உரிமையாளர்களில் 60 சதவீதத்தினர் உரிய வரியை செலுத்தவேண்டும் என அவர் கூறினார்.

வெதுப்பக உரிமையாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரியில் இருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்றும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

வெதுப்பக தயாரிப்புகளுக்கு மேலதிகமாக, பேக்கரி உரிமையாளர்கள் மாஜரின் மற்றும் பால் பவுடர் போன்ற மூலப்பொருட்களுக்கு 12 சதவீத வற் வரி செலுத்துகின்றனர். எனவே வெதுப்பக பொருட்களுக்கு வற் வரியை நீக்கி நிவாரணம் வழங்க வேண்டுமென பேக்கரி உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக சுமார் 2000 சிறிய அளவிலான பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய விமானம் பகிரங்க மன்னிப்பு கோரினார் அமைச்சர்

கொழும்பு, ஜுன் 07

ரஷ்ய விமானப் பயணிகளிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.

ரஷ்யாவுக்கு சொந்தமான ஏரோபுளொட் விமான சேவை விமானம் தடுத்து வைக்கப்பட்டமையால் பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியங்களுக்காக இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பில் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.

இந்த சம்பவம் ஓர் துரதிஸ்டவசமான சம்பவம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புக்கும் - ரஷ்யாவுக்கும் இடையில் விமானப் பயணங்கள் பிரச்னைக்கு தீர்வு கண்டு கொழும்புக்கும் - ரஷ்யாவுக்கும் இடையில் விரைவில் விமான பயணங்களை ஆரம்பிக்க விரும்புவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ)

# இடைக்கால அரசு அமைக்கப்பட்ட பின் ரணிலுக்கு எதிராக முதலாவது வழக்கு!

கொழும்பு, ஜுன் 07

நடப்பு பொருளாதார சீரழிவுக்கு காரணமானவர்களை விசாரணை செய்யக்கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைமீறல் மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முதல் பிரதி வாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கலாநிதி அதுலகுமார சமரகோன், சூசையப்பு நேவிஸ் மொரைஸ் மற்றும் கலாநிதி மஹிம் மெண்டிஸ் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் அலி சப்ரி, உட்பட முழு அமைச்சரவையின் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

இதனை தவிர, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி. பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள் டபிள்யூ.டி. லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் திறைசேரி முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல ஆகியோரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் உறுப்பினர்களும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபயவின் என்ற "செழிப்பான பார்வை" தேர்தல் விஞ்ஞாபனத்தின் கீழ் வரிக்குறைப்பும் இன் றைய பொருளாதார சீர்குலை வுக்கு காரணம் என்றும் மனு தாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2022, ஏப்ரல் நிலவரப்படி, முன்னையஆண்டை விட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக மனுதாரர்கள் கூறியுள்ளனர். (அ)

# ஜுன் 12 ஆம் திகதி வரை மின்சாரம் தடைப்படும்

கொழும்பு, ஜுன் 07

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை மின்சாரம் தடைப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முதல் 10 ஆம் திகதி வரை 2 மணி நேரம் 15 நிமிடங்கள்மின்வெட்டு அமுல் படுத்தப்படும் என ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (அ)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி வடமராட்சி வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஜுன் 07

பருத்தித்துறை பகுதியில் இன்று காலை வீட்டு வளவில் வேலை செய்து கொண்டிருந்த போது குளவிக் கொட்டுக்கு இலக்கானவர் மயக்கமடைந்த நிலையில், வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதன்போது சக்கோட்டை சேர்ந்த சூசைப்பிள்ளை சகாயராசா (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ-2)

# வைத்தியசாலையில் உணவு தட்டுப்பாடு; உடனே உதவி வழங்கினர் நாட்டு மக்கள்

கொழும்பு, ஜுன் 07

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் உணவு விநியோகத்தில் பிரச்னை ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியானது.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு தேவையான அளவை விட அதிகமான உணவுப் பொருட்களை இலங்கை மக்கள் வழங்கி நெகிழ வைத்ததாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் வைத்தியசாலையில் உணவுப் பொருட்கள் தேவைக்கு அதிகமாக கிடைத்தால் வீணாகி விடலாம் எனவும், முடிந்தால் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க தேவையான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை நன்கொடையாளர்கள் வழங்குமாறும் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் தேவையான மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்துவமனையில் மருந்து தட்டுப்பாடு உள்ளதாக, பணிப்பாளர் கூறினாலும், நாட்டில் போதியளவு மருந்துகள் இருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (அ)

# அரச நிறுவனங்களின் தலைவர்களை நினைத்தவுடன் பதவி நீக்கமுடியாது!

ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்து

கொழும்பு, ஜுன் 07

அமைச்சுக்களின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை திடீரென்று பதவி நீக்கம் செய்யக்கூடாது என்று ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

அமைச்சுகளின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை தன்னிச்சையாக நீக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு நிறுவனத் தலைவர்கள் பதவி நீக்கப்படவேண்டுமாயின் முன் கூட்டியே ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்படவேண்டும்.

அவ்வாறின்றி ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்காமலோ, ஜனாதிபதி செயலக இணக்கப்பாடு இன்றியோ எந்தவொரு அரச நிறுவனத்தின் தலைவரும் பதவி நீக்கம் செய்யப்படக்கூடாது-என்றுள்ளது. (அ)



# ரஷ்ய விமானத்தை இலங்கையில் தடுத்துவைத்ததால் ஏற்பட்ட ராஜதந்திர சிக்கல்!

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டது, தற்போது ராஜதந்திர ரீதியிலான பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது.

இந்த பிரச்சினையால், இலங்கையின் எரிசக்தி, சுற்றுலாத்துறை மற்றும் ராஜதந்திர தொடர்புகளுக்கு எதிர்மறையான அழுத்தங்கள் ஏற்படக்கூடும் என சர்வதேச தொடர்புகள் குறித்த விசேட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பிரச்சினைக்கு மத்தியில், எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கை, ரஷ்யாவிடம் கோரியுள்ள 500 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவித் திட்டம் இல்லாது போகுமா? என்பதும் தற்போது கேள்விக்குள்ளாகியுள்ளது.

## ரஷ்ய அரசு அதிருப்தி

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் இலங்கையின் பிரதான விமான நிலையமான கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து, ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவர் ஜனிதா அபேவிக்ரம லியனகேவை, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அழைத்து தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவர் ஜனிதா அபேவிக்ரம லியனகேவை, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு கடந்த 3ம் திகதி அழைத்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமான நிறுவனத்திற்கு சொந்தமான எஸ். யூ.-288 கடந்த 2ம் திகதி ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் இருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்திற்கு வருகைத் தந்தது.

இவ்வாறு வருகை தந்த விமானம், அன்றைய தினமே 191 பயணிகள் மற்றும் 13 விமான பணியாளர்களுடன் மாஸ்கோ நகரம் நோக்கி பயணிக்க திட்டமிட்டிருந்தது.

இந்த நிலையில், கொழும்பு வணிக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு ஒன்றினால், குறித்த விமான சேவை அன்றைய தினம் தடை செய்யப்பட்டு, விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது.

இந்த விமானம் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டமை குறித்து இலங்கை ராஜதந்திர தூதுக்குழுவின் பிரதானி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு ஏற்படும் எதிர்மறையான அழுத்தங்களை தவிர்த்துக்கொள்ள இந்த பிரச்சினைக்கு குறுகிய கால தீர்வொன்றை எடுக்குமாறு இலங்கை தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம்" என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கான வணிக விமான சேவையை ரத்து செய்த ஏரோபுளோட்

இந்தப் பிரச்சனையை அடுத்து, ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் சேவை நிறுவனம், இலங்கைக்கான வணிக விமான சேவையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.



ஏரோபுளோட் விமான சேவையானது, ரஷ்யாவின் மிக பெரிய விமான சேவை என்பதுடன், உலகின் மிக சிறந்த விமான சேவைகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

ஏரோபுளோட் விமான சேவை நிறுவனத்தின் விமான சேவையை இலங்கைக்கு தடையின்றி நடத்துவதை உறுதிப்படுத்துவது குறித்து ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மை காரணமாக, இலங்கைக்கான தமது வணிக விமான சேவையை இடைநிறுத்துவதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பு நகருக்கான விமான பயணச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும், கொழும்புவில் இருந்து ஜூன் 2, ஜூன் 4 மற்றும் ஜூன் 5 ஆகிய திகதிகளுக்கு பயண சீட்டு விநியோகிக்கப்பட்ட பயணிகளுக்கு மாத்திரம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எஸ். யூ.-289 விமானத்தின் ஊடாக மாஸ்கோ நகரத்துக்குச் செல்ல வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## நீதிமன்றத் தீர்ப்பு

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்றிற்கு, இலங்கையிலிருந்து வெளியேற கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் கடந்த 2ம் திகதி இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

அயர்லாந்து நாட்டின் சேலேஸ்டியல் ஏவியேஷன் ட்ரேடிங் லிமிடட் என்ற நிறுவனம் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை அடுத்தே, ரஷ்ய விமான நிறு வனத்துக்கு சொந்தமான விமானத்திற்கு இலங்கையிலி ருந்து வெளியேற கொழும்பு வணிக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க தடையுத் தரவை பிறப்பித்திருந்தார்.

எதிர்வரும் 16ம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதியான ரஷ்ய விமான சேவை நிறுவனத்திற்கும், தமக்கும் இடையில் வழக்கொன்று இருப்பதாக முறைப்பாட்டாளர் தரப்பு நிறுவனம் தெரிவிக்கின்றது. அதனால், பிரதிவாதிக்கு சொந்தமான விமானத்தை இலங்கையிலிருந்து வெளியேற தடை விதிக்குமாறு கோரி, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளை நடத்திய, கொழும்பு வணிக மேல் நீதிமன்றம், இந்த இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இதேவேளை, தமது விமானத்திற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவை ரத்து செய்யக்கோரி, ரஷ்ய விமான நிறுவனம் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை 8ம் திகதி விசாரிக்க கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ரஷ்ய விமான சேவை நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்திற்கு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதேவேளை, சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இரு தரப்பு இணக்கப்பாடுகள் அடிப்படையில் சர்வதேச விமானங்கள் இலங்கையில் தரையிறங்கவும், வெளியேறவும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இலங்கை அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக சட்ட மாஅதிபர் சார்பில் முன்னி லையான மேலதிக சொலிசிடர் ஜெனரல் சுமதி தர்மவர்தன நீதிமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

இதன்படி, தரையிறக்கப்படும் விமானங்கள் மீண்டும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு, சட்டத்தில் அதிகாரம் உள்ளதாகவும், இவ்வாறான இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்றும் அரச மேலதிக சொலிசிடர் ஜெனரல் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள் ளார்.

இந்த தடையுத்தரவு கார ணமாக 191 பயணிகள் மற்றும் 13 விமான பணியாளர்களுக்கு நாட்டை விட்டு வெளியேற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக, ரஷ்ய விமான சேவை நிறுவனம் சார்பில் முன்னி லையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

இந்த நடவடிக்கை காரணமாக பயணிகள், பணியாளர்கள் ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதால், ரஷ்ய விமான சேவை நிறுவனத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க....)



# இலங்கையை தொடர்ந்து பாகிஸ்தான்!

## இந்தியாவில் இப்போதைக்கு ஆபத்தில்லை: தமிழக தினசரி தினமணி தலையங்கம்!

பாகிஸ்தானின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானில் எரிபொருள்கள் விலை கடந்த மே 26-ஆம் திகதி ரூ.30 உயர்த்தப்பட்டதால், பெட்ரோல் ஒரு லீற்றர் ரூ.179.86 ஆகவும் (இலங்கை ரூபா மதிப்பில் 850), டீசல் ரூ.174.15 ஆகவும் (இலங்கை ரூபா மதிப்பில் 826)அதிகரித்துள்ளது. சமையல் எண்ணெய் விலை நேற்று (ஜுன் 1) ஒரே நாளில் ரூ.213 உயர்த்தப்பட்டதால் ஒரு லீற்றர் ரூ.605 (இலங்கை ரூபா மதிப்பில் 2873) என வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

"லாகூரில் எந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பெட்ரோல் இல்லை. ஏடிஎம் இயந்திரங்களில் பணம் இல்லை. அரசியல் முடிவுகளால் பொதுமக்கள் ஏன் பாதிக்கப்பட வேண்டும்?" - இது பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் முகமது ஹபீஸின் ட்விட்டர் பதிவு.

இலங்கையில், கடந்த 50 நாள்களாக மக்கள் தெருக்களில் இறங்கி போராடி வருகின்றனர். பொருளாதார பாதிப்பு ஏதோ இந்த இரண்டு நாடுகளுக்குத்தான் என்று நாம் எண்ணிவிட வேண்டாம். உலகில் உள்ள பல நாடுகளின் நிலைமை இதுதான்.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு தொடங்குவதற்கு முன்பே, கடன் நிலவரம் தொடர்பாக உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில், 70 நாடுகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தது. கொரோனா நெருக்கடியில் இருந்து உலக நாடுகள் மீண்டு மூச்சு விடுவதற்குள் உக்ரைன் - ரஷ்ய போர் தொடங்கி, நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

உக்ரைன் போர் காரணமாக 107 நாடுகள் கடும் நெருக்கடியை சந்திக்க உள்ளன என்றும், இதில் 69 நாடுகள் உணவுப் பொருள்களின் விலை உயர்வு, எரிபொருள் விலை உயர்வு, நிதி நெருக்கடி போன்றவற்றால் மிகக் கடுமையாக பாதிக்கப்படக் கூடும் என்றும் ஐ.நா. கடந்த மார்ச் மாதம் வெளியிட்ட அறிக்கையில் எச்சரித்திருந்தது.

போருக்கு முன்பாக உலகின் கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யா, உக்ரைனின் பங்கு 28 வீதம். பயிர்களுக்கு முக்கிய உரமான பொட்டாஷ் ஏற்றுமதியில் ரஷ்யா, பெலாரஸின் பங்கு 40 வீதம். எரிபொருள் ஏற்றுமதியிலும் ரஷ்யாவின் பங்கு கணிசமானது. போரால் கோதுமை, பொட்டாஷ், எரிபொருள் ஆகியவற்றின் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாடு காரணமாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் பல பில்லியன் டாலரகளை உக்ரைனுக்கு அளித்து போர் முடிவுக்கு வராமல் பார்த்துக் கொள்கின்றன. இன்னொருபுறம், போர் காரணமாக உக்ரைனில் இருந்து லட்சக்கணக்கானோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்துக்கும் இந்த நாடுகள் பெரும் தொகையை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

கொரோனாவுக்கு முன்பே கடனில் சிக்கிய ஏழை நாடுகளுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார ரீதியாக ஓரளவுக்கு உதவிக்கரம் நீட்டி வந்தன. கொரோனா பாதிப்பு, உக்ரைன் போர் காரணமாக ஏழை நாடுகளுக்கு செய்து வந்த நிதி உதவியை ஐரோப்பிய நாடுகள் முற்றிலுமாக நிறுத்தக்கூடும். "ஏழை நாடுகளுக்கு உதவுபவர்கள், அதை நிறுத்திவிட்டு போருக்கு அதிகம் செலவழித்தால் அது பெரும் சோகத்தில்தான் முடியும்" என்று எச்சரிக்கிறார் ஐ.நா. சபையின் துணை பொதுச் செயலாளர் அமினா முகமது.

உணவு, எரிபொருள் பற்றாக்குறை, அதிக வறுமை போன்றவை இலங்கையிலும், பாகிஸ்தானிலும் காணப்படுவது போல பொருளாதார வளர்ச்சி அடை யாத பெரும்பாலான நாடுகளில் சமூக அமைதியைக் கேள்விக்குறியாக்க கூடும். இலங்கையைப் போல மக்கள் தெருவில் இறங்கி போராடி அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



போர் சூழலில் ஏற்றுமதி, உணவு விநியோக சங்கிலியில் பாதிப்பு காரணமாக உகாண்டா, கென்யா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, ஜிம்பாப்வே, நேபாளம், செனகல், கோஸ்டாரிகா உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட நாடுகளில் உணவுப் பொருள்களின் விலை மிகமிக கடுமையாக அதிகரிக்கும் என சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) எச்சரித்தி ருக்கிறது. இதில் பெரும்பான் மையானவை ஆப்பிரிக்க நாடுகளாகும்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் கடுமையான பொருளாதார நெருக் கடியை சந்திக்கவில்லை என் றாலும், ஐரோப்பிய நாடுகளில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு விலைவாசி விண்ணைத் தொட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு பொருளாதார ரீதியாக நெருக்கடி கொடுப்பதற்காக, இந்த ஆண்டு இறுதிக்குள் ரஷ்யாவிலிருந்தான கச்சா எண்ணெய் இறக்குமதியில் 90வீதத்தை நிறுத்த ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.

இதனால், ரஷ்யாவுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும், ஐரோப்பிய நாடுகளில் எரி பொருள் விலை புதிய உச்சத்தை தொடக்கூடும்.

ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் விலைவாசி சற்று அதிகரித்திருந்தாலும்கூட, தட்டுப்பாடில்லாமல் தொடர முடிகிறது. மத்திய அரசால் சுமார் 80 கோடி பேருக்கு இரண்டாண்டுகளுக்கும் மேலாக மாதாமாதம் 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப் படுவது உலகின் வேறெந்த நாட்டிலும் செய்யப்படாத சாதனை. வலிமையான நிர்வாகக் கட்டமைப்பும், தேவைக்கு அதிகமான உணவு உற்பத்தியும், தளர்வில்லாத போராளி இயக்கமும் இதற்கு முக்கியமான காரணிகள். மக்கள் செல்வாக்குள்ள வலுவான தலைமையும்கூட காரணம்.

மிகவும் இக்கட்டான சூழலில் உலகம் சிக்கிக் கொண்டிருக்கிறது. உக்ரைன் - ரஷ்யப் போர் முடிவுக்கு வந்தாலும், மீண்டெழுவதற்கு சில ஆண்டுகளாகும். அதைக் கருத்தில் கொண்டு நாம் முன் னெச்சரிக்கையுடன் இருந்தாக வேண்டும்!

(தினமணி)

# ரஷ்ய விமானத்தை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முறைப்பாட்டாளர் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது, அடிப்படையற்றது எனவும், நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடையுத்தரவை ரத்து செய்யுமாறும் சட்டத்தரணி, நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் தொடர்பு கிடையாது என விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) நிறுவனம் தெரிவிக்கின்றது.

**இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேவ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் தொடர்பில், இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தாம் நீதிமன்றத்தின் முடிவை எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

அத்துடன், இது குறித்து ராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

கடுமையான பொருளாதார பாதிப்பு ஏற்படக்கூடும்

இந்த தடையுத்தரவு காரணமாக மூன்று பிரிவுகளின் கீழ் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச தொடர்பாடல் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ஹசித்த கந்தஉடஹேவா தெரிவிக்கின்றார்.

"குறைந்த விலையில் எரிபொருளை நேரடியாக விநியோகிக்க ரஷ்யா எமக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. 4 முதல் 6 மாத காலத்திற்குள் 4 லட்சம் சுற்றுலாப் பயணிகள், ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வருகைத் தரத் திட்டமிட்டுள்ளனர். இந்த விவகாரத்தால் இந்த இரண்டுக்கும் பாதிப்பு ஏற்படும். இது அரசாங்கங்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல. ரஷ்யாவின் எந்தவொரு விமானத்திற்கும் தடை ஏற்படுத்தப்படாது என இலங்கை ராஜதந்திர ரீதியில் இணங்கியுள்ளது. நீதிமன்ற நடவடிக்கை காரணமாக ராஜதந்திர ரீதியிலான உறவுகளுக்கு தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எமது எரிசக்தி துறைக்கும், பொருளாதார மீள் கட்டமைப்பிற்கும் இது நல்லதல்ல" என அவர் கூறுகின்றார்.

"எமது பொருளாதார நிலைமைக்கு இந்த பாரிய அச்சுறுத்தலான விடயமாகும். எதிர்காலத்தில் எமக்கு இடையில் சிறந்த தொடர்புகளை அவர்கள் பேண மாட்டார்கள். எதிர்வரும் மாதம் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டாலரை இலங்கை கடனாக ரஷ்யாவிடம் கோரியுள்ளது. இதுவும் பிரச்சினையாக மாறக்கூடும்" என பேராசிரியர் ஹசித்த கந்த உடஹேவா தெரிவிக்கிறார்.

"இதில் இரு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடு செய்ய முடியாது. எனினும், மறுபுறத்தில் ராஜதந்திர உடன்படிக்கையின் செல்லுபடித் தன்மையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது" என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய விமானம் தொடர்பிலான பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார ரீதியில் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்பாக, தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என அவர் கூறுகிறார்.

(பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ......................................................................

ii) old / How / you? /are : ........................................................................ (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ....................................................................................

ii) அங்கே பாருங்கள் : .................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** | 7 | 8 | 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

...........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

### கல்வி tv CHANNEL-1 — 31.05.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2 — 31.05.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சாதனை மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு



அம்பாறை, ஜூன். 07

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்டத்திலுள்ள, பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 145 மாணவர்களையும், அவர்களுக்கு கற்பித்த 46 ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் அனுசரணையில், கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.எம். ஸம்சம் தலைமையில், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் ஸ்தாபகத் தலைவியும் சட்டத்தரணியுமான மரியம் நளிமுத்தீன் (அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் செயலாளர்) , கௌரவ அதிதிகளாக மருத்துவர் எஸ்.நஜிமுதீன், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளர் எம்.சி.எம்.மாஹிர், கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம்.ஜாபிர் , விஷேட அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே.தாஸிம் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

2021 ஆம் ஆண்டில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 145 மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கியதோடு, கற்பித்த 46 ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (அ)

# அதிபர், ஆசிரியர்களுக்கு சிலரினால் அச்சுறுத்தல்!

## கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் பாடசாலை முன்பாக நேற்றுப் போராட்டம்





**மட்டக்களப்பு, ஜூன்.07**

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை இராம கிருஸ்ணமிசன் பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் நேற்று காலை முதல் பணி பகிஸ்கரிப்பிலும் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.**

இதன் காரணமாக நேற்று மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இராம கிருஸ்ணமிசன் பாடசாலையின் உடைமைகள் கடந்த சில நாட்கள் சேதமாக்கப்பட்டு வருவதுடன் அதிபர், ஆசிரியர்களுக்கு சிலர் அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாட்டைக் கண்டித்தும் இதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு வலியுறுத்தியுமே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாதாரண தர பரீட்சைக்காக பாடசாலைகள் விடுமுறை வழங்கப்பட்டு நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று காலை பாடசாலைக்கு வந்த அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தமக்கு தீர்வு வழங்கக் கோரி இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பாடசாலைக்குள் இருந்த சி.சி.ரி.வி கமெராக்களை உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலை அதிபரின் காரியாலயம்,நடன ஆசிரியர் காரியாலயம் மற்றும் பாடசாலையின் தளபாடங்கள் என்பனவும் உடைக்கப்பட்டுள்ளன.

சில மாணவர்களும் பெற்றோரும் தமக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக பாடசாலை அதிபர் சுகுணதாஸ் ரவிசங்கர் தெரிவித்தார்.

பாடசாலையில் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த சம்பவங்கள் தொடர்பில் பாடசாலை சமூகமும் கிராம மக்களும் அக்கறையற்ற நிலையில் உள்ளதால் தங்களுக்கு தொடர்ந்து இந்த பாடசாலையில் கடமையாற்ற முடியாத நிலையுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

இதன்போது பாடசாலைக்கு வந்த வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸாரும் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

இது தொடர்பிலான முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வருகை தந்த மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதி கல்விப்பணிப்பாளர் த.அனந்தகுமார் தலைமையிலான குழுவினர் போராட்டம் நடத்திய அதிபர்,ஆசிரியர்களுடன் பேச்சு நடத்தினர்.

இதன்போது உடனடியாக காவலாளி ஒருவரை பாடசாலைக்கு நியமிக்கவும் பெற்றோரை அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கி எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாத வகையில் நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் இதன்போது அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒரு வார அவகாசம் வழங்குவதாகவும் அதற்குள் தாங்கள் சுதந்திரமாக தமது கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிலைமை ஏற்படுத்தவேண்டும் எனவும் அவ்வாறு நடவடிக்கையெடுக்காவிட்டால் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என இங்கு அதிபர், ஆசிரியர்களினால் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகள் தொடர்ந்து சிறப்பாக இயங்க வேண்டுமானால் மாணவர்களின் ஒழுக்கம் என்பது மிகவும்முக்கியமானது.இவ்வாறான பிரச்னைகளினால் ஆசிரியர்களும் மன உளைச்சலுக்குள்ளாகி இடமாற்றம் கோரி வருகின்றனர்.இது தொடர்பில் பாடசாலை சமூகமும் பொலிஸாரும் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது இந்த பாடசாலை நல்ல நிலைக்கு வருவதற்கான சாதகமான சூழல் ஏற்படும் என மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.அனந்தகுமார் தெரிவித்தார். (அ)

# சம்மாந்துறையில் சீனிக்கு வரிசை



அம்பாறை, ஜூன். 07

சம்மாந்துறை ச.தொ.சவில் சீனி வாங்குவதற்காக மக்கள் கடந்த இரண்டு நாட்களாக வரிசையில் நிற்கிறார்கள்.

ஒருவருக்கு ஒரு கிலோ சீனி மட்டுமே வழங்கப்பட்டது. பழுப்பு நிற சீனி ஒரு கிலோ 177 ரூபாய்க்கும், வெள்ளை சீனி 240 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், வெளி கடைகளில் ஒரு கிலோ சீனி 350 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளராக பிரான்சிஸ் மகேந்திரன்



மட்டக்களப்பு, ஜூன். 07

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக தாழங்குடாவைச் சேர்ந்த ஆசிரியர் பிரான்சிஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில் கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக்கடிதம் எதிர்க்கட்சித் தலைவரும், கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்டது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்காக மட்டக்களப்பில் சிறந்த முறையில் செயற்பட்டமையால் குறித்த நியமனம் இவருக்கு வழங்கப் பட்டுள்ளதாக கட்சியின் தகவல்கள் தெரிவித்தன.

அத்தோடு கடந்த பாராளுமன்ற தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகளவிலான வாக்குகளை பெற்றுக் கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்ணெண்ணெய், பெற்றோலை பெறுவதற்கு காத்திருக்கும் மக்கள்



அம்பாறை, ஜூன். 07

மண்ணெண்ணெய் பெறுவதற்காக சாய்ந்தமருதில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தை சூழ்ந்துகொண்டனர்.

கல்முனையிலும், பெற்றோல் பெறுவதற்காக நேற்று திங்கட்கிழமை அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்தனர். (அ)

# புதிய இலக்குகளை தாக்குவோம்!

## மேற்குலகுக்குப் புடின் எச்சரிக்கை



மொஸ்கோ, ஜூன். 07

மேற்கு நாடுகள் நீண்ட தூரம் சென்று தாக்குகின்ற ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கினால் ரஷ்யா புதிய இலக்குகள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கும்.

அரசுத் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். போர் ஆரம்பித்த பிறகு அவர் இவ்வாறு நேரடியான அச்சுறுத்தலை விடுப்பது இதுவே முதல் முறை ஆகும். கடந்த சில வாரகால இடைவெளிக்குப் பின்னர் உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா ஞாயிறு காலை ஏவுகணைகளை வீசித் தாக்கியுள்ளது. அந்தத் தாக்குதல் நடந்து சில மணி நேரத்துக்குப் பின்னரே புடினின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

“மேற்குலகின் அளவுக்கு அதிகமான ஆயுத விநியோகங்கள் என்னைப் பொறுத்தவரை இந்த ஆயுத மோதல் இன்னும் நீண்டுசெல்வதற்கே உதவப் போகின்றன. நீண்ட தூர ஏவுகணைகள் வழங்கப்பட்டால் அதற்குப் பொருத்தமான முடிவுகளை நாங்கள் எடுப்போம். எங்களிடம் தாராளமாக உள்ள அவை போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவோம். இதுவரை தாக்காத இலக்குகளைத் தாக்குவோம் ”-என்று புடின் அந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

“ஹிமார்ஸ்”என்கின்ற எம் 142 நடுத்தரத் தொலைவு ஆட்டிலறி ஏவுகணைத் தொகுதிகளை உக்ரைனுக்கு வழங்குவதாக சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கா அறிவித்திருந்தது. உக்ரைனுக்கு இதுவரை மேற்கு நாடுகள் அள்ளி வழங்கிய ஆட்டிலறிப் பீரங்கிகளிலேயே அதிக தூரம் சென்று தாக்க வல்ல ஏவாயுதம் இதுவாகும். கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யாவின் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டுமானால் இத்தகைய தொலைதூர ஏவுகணைகள் அவசியமாகும் என்பதை உக்ரைன் அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுவந்தது.

அதனை ஏற்றுக் கொண்டு அமெரிக்கா தற்சமயம் ரஷ்யாவின் எல்லைகளுக்குள் தாக்குவதற்குப் பயன்படுத்தக் கூடாது என்ற முன் நிபந்தனையுடன் இந்த நவீன ஆட்டிலறி ரொக்கெட்டுகளைஉக்ரைனுக்கு வழங்குகிறது.

உக்ரைன் படைகளால் தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஆட்டிலறி ஏவுகணைகளை விட அதிகமாக 70 கிலோ மீற்றர்கள் (45மைல்கள்) தொலை வில் உள்ள இலக்குகளை மிகத் துல்லியமாகத் தாக்கக் கூடிய - வழிகாட்டல்களின் கீழ் இயங்கவல்ல - ஏவுகணைகளைக் கொண்டது ஹிமார்ஸ்ஆட்டிலறித் தொகுதி.

டொன்பாஸ் பிராந்தியத்தில் இடம்பெற்றுவருகின்ற தீவிர யுத்தத்தில் இந்தப் பீரங்கிகள் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது. (அ)

# தேவாலயத்துக்குள் வைத்து 50 பேர் சுட்டுப் படுகொலை!

## தென்மேற்கு நைஜீரியாவில் ஆயுததாரிகள் கொடூரம்







அபுஜா, ஜூன்.07

**தென்மேற்கு நைஜீரியாவில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்துக்குள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை புகுந்த ஆயுததாரிகள் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட குறைந்தது 50 பேரை சரமாரியாக சுட்டுக் கொன்றனர்.**

இந்தத் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்ததாகவும் தென்மேற்கு நைஜீரியாவின் ஒண்டோ மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பன்மிலாயோ இபுகுன் ஒடுன்லாமி கூறினார்.

ஒண்டோ மாகாண ஆளுநர் அரகுன்றின் ஒலுவரோதிமி அகெரெடோலு தாக்குதல் நடந்த இடத்துக்கு விஜயம் செய்ததுடன், தாக்குதலில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவத்தை “ஒரு பெரிய படுகொலை” என்று அவர் விவரித்தார். இது மீண்டும் நடக்க அனுமதிக்க கூடாது எனவும் அவர் கூறினார்.

தாக்குதல் நடத்தியவர்கள் யார்? அவர்களின் நோக்கம் என்ன? என்பது குறித்த விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

தேவாலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மிகவும் வருத்தமளிக்கிறது என நைஜீரியா கத்தோலிக்க திருச்சபையின் செய்தித் தொடர்பாளர் ரெவரெண்ட் அகஸ்டின் இக்வு கூறினார்.

இந்த தாக்குதலில் திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார்கள் எவரும் பாதிக்கப்படவில்லை எனவும் இக்வு குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து 50 பேரின் சடலங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டதாக ஓவோ நகர மருத்துவமனை மருத்துவர் ஒருவர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் உறுதி செய்துள்ளார்.

ஊடகங்களிடம் பேசுவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி பெயரை வெளியிட மறுத்த அவர், காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க அதிக இரத்தம் தேவை. எனவே இரத்தானம் செய்யுமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்பதாகக் கூறினார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் கொடூரமானது என நைஜீரிய ஜனாதிபதி முஹம்மது புஹாரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாப்பரசர் பிரான்ஸிஸ் நேற்று முன்தினம் ஆராதனையின்போது பிரார்த்தனை செய்ததாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

நைஜீரியா வடகிழக்கில் இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இங்கு இதுபோன்ற தாக்குதல்கள், கடத்தல்கள் சாதாரணமானவை. எனினும் தென்மேற்கில் நேற்று முன் தினம் இடம்பெற்றது போன்ற தாக்குதல்கள் அரிதானவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வடகொரியாவுக்கு பதிலடி!

# தென் கொரியா-அமெரிக்கா இணைந்து நேற்று 8 ஏவுகணைகளை ஏவி சோதனை

சியோல், ஜூன். 07

தென் கொரியா மற்றும் அமெரிக்கா இணைந்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை தென் கொரியாவின் கிழக்குக் கடற்கரையில் அடுத்தடுத்து 08 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட ஏவுகணை சோதனை உட்பட வட கொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அதற்குப் பதிலடியாக இந்த ஏவுகணை சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட கொரியாவின் இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடிய திறன் மற்றும் தயார் நிலையை நிரூபிக்கும் வகையில் இந்தச் சோதனைகள் இடம்பெற்றதாக தென் கொரிய இராணுவத்தை மேற்கோளிட்டு தென் கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட கொரியாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவுள்ளதாக கடந்த மாதம் பதவியேற்ற தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் உறுதியளித்தார்.

அத்துடன், தென் கொரியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவ பயிற்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த பதிலளிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் கடந்த மாதம் தென் கொரியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் ஆகியோர் உடன்பட்டனர்.

இவ்வாறான நிலையிலேயே வட கொரியாவுக்கு பதிலடியாக அடுத்தடுத்து 8 ஏவுகணைகளை ஏவி தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் இராணுவத்தினர் சோதனை நடத்தியுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4:45 மணிக்கு தொடங்கி சுமார் 10 நிமிடங்களுக்குள் 08 ஏவுகணைகளும் ஏவப்பட்டதாக தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகங்களிடம் உறுதி செய்தார்.

வட கொரியா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 8 குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகள் அதன் கிழக்குக் கடற்கரையில் ஏவி சோதனை செய்தது. ஒரு நாளில் வட கொரியா நடத்திய அதிக ஏவுகணை சோதனையாக இது அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பிராந்திய, உலக அமைதிக்கு வடகொரியாவினால் ஆபத்து!

## தென் கொரிய ஜனாதிபதி எச்சரிக்கை



சியோல், ஜூன். 07

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணு ஆயுதத் திட்டங்கள் பிராந்திய மற்றும் உலக அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நிலையை எட்டியுள்ளது தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் நேற்று திங்கட்கிழமை எச்சரித்துள்ளார்.

வட கொரியா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 8 குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை அதன் கிழக்குக் கடற்கரையில் ஏவி சேதனை செய்த நிலையிலேயே யூன் சுக்-யோல் இவ்வாறு எச்சரித்துள்ளார்.(அ)

# ஆப்கானில் நிலநடுக்கம்

காபூல், ஜூன். 07

ஆப்கானிஸ்தானின் பைசபாத்தில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.1, 6.2 என பதிவானதாகவும், அந்நாட்டு நிலவரப்படி திங்கள்கிழமை 1.04 மணிக்கு பைசாபாத் நகருக்கு கிழக்கே 235 கிலோமீற்றர் தொலைவில், 166 கிலோமீற்றர் ஆழத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட உயிர்சேதம் அல்லது பாதிப்புகள் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை. (அ)

# மெஸ்ஸி ஐந்து கோல்கள் ஆர்ஜென்ரீனா வெற்றி!



மட்ரிட், ஜூன் 07

மெஸ்ஸி அடித்த 5 கோல்கள் மூலம் எஸ்தோனியா அணியை இலகுவாக வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா அணி.

ஐரோப்பா - தென்னமெரிக்க சம்பியன் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா 3-0 என்ற கோல் கணக்கில் இத்தாலி அணியை வீழ்த்தியது.

இந்தப் போட்டியில் மெஸ்ஸி இரு உதவிகளை வழங்கியபோதும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் ஸ்பெயினில் நடந்த எஸ்தோனியா அணிக்கு எதிரான நட்பு ரீதியான போட்டியில் 8ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதை மூலம் கோல் அடித்து ஆர்ஜென்ரீனா அணியை முன்னிலை பெறச் செய்தார் மெஸ்ஸி.

தொடர்ந்து, 45, 47, 71, 76ஆவது நிமிடங்களில் ஆர்ஜென்ரீனா அணிக்காக மெஸ்ஸி கோல்களை அடித்தார். இந்தக் கோல்கள் மூலம், தனது நாட்டு அணிக்காக முதன்முறையாக 5 கோல்களை அடித்து சாதனை படைத்தார் மெஸ்ஸி. இதுதவிர, உலகில் அதிக கோல்கள் அடித்த உதைபந்தாட்ட வீரர்கள் பட்டியிலில் நான்காவது இடத்துக்கு மெஸ்ஸி (86 கோல்கள்) முன்னேறினார். இந்தப் பட்டியலில் மெஸ்ஸியின் போட்டியாளராகப் பார்க்கப்படும் போர்த்துக்கல்லின் கிறிஸ்ரியானோ றொனால்டோ 117 கோல்களுடன் முதலிடத்தில் இருக்கிறார்.

இறுதியில், ஆர்ஜென்ரீனா - எஸ்தோனியா நட்பு உதைபந்தாட்ட போட்டியில் ஆர்ஜென்ரீனா 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)




### உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:

## 64 ஆண்டுகளின் பின் வேல்ஸ் அணி தகுதி!

லண்டன், ஜூன் 07

உக்ரைன் அணியை வீழ்த்தி 64 ஆண்டுகளுக்கு பின்னர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது வேல்ஸ் அணி.

22ஆவது உலகக் கிண்ணத் உதைபந்தாட்டத் தொடர் எதிர்வரும் நவம்பர் - டிசெம்பர் மாதங்களில் கட்டாரில் நடக்கிறது.

இந்தத் தொடருக்கு 29 அணிகள் தகுதி பெற்றுள்ளன. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதி தகுதிச்சுற்று போட்டியில் உக்ரைன் - வேல்ஸ் அணிகள் மோதின. இதில், வெற்றி பெறும் அணி உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெறும் என்ற நிலை இருந்தது.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய வேல்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதனால் 64 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக உலகக்கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கு அந்த அணி தகுதி பெற்றுள்ளது. (ஐ)



## பிரண்டன் மக்கலத்துடன் பணியாற்றியது மகிழ்ச்சி

### இங்கிலாந்து அணித் தலைவர்

லண்டன், ஜூன் 07

பயிற்றுவிப்பாளர் பிரண்டன் மக்கலத்துடன் இணைந்து பணியாற்றியது உற்சாகம் தருவதாக இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் கூறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெற்றிக்குப் பிறகு இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் கூறுகையில்,

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் மோதும் டெஸ்ட் போட்டி என்றாலே அதுவும் லோர்ட்ஸில் மோதுவது எப்போதுமே வியப்புக்குரிய வகையில் இருக்கும். எனது தலைமைப் பயணத்தை வெற்றியுடன் தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

பயிற்றுவிப்பாளர் பிரண்டன் மக்கலத்துடன் இணைந்து முதல்வாரம் பணியாற்றியது உண்மையிலேயே உற்சாகம் தந்தது. இந்த டெஸ்டைப் பொறுத்தவரை இரு அணியினருக்குமே ஏற்றம் இறக்கம் கொண்டதாக இருந்தது. எந்த ஒரு தருணத்திலும் யாருடைய கையும் ஓங்கவில்லை. கடினமான இந்த ஆடுகளத்தில் 277 ஓட்டங்களை விரட்டிப்பிடித்தது அற்புதமானது.

10 ஆயிரம் ஓட்டங்களை, 4வது இனிங்ஸ் சதத்தோடு நிறைவு செய்வது அருமையான சாதனை. என்ன ஓர் அற்புதமான வீரர் ஜோ ரூட் என்று கூறினார். (ஐ)

### ஐரோப்பிய நேஷன்ஸ் லீக்:

## றொனால்டோ அதிரடி போர்த்துக்கல் வெற்றி!

கிறிஸ்ரியானோ றொனால்டோ போட்ட இரு கோல்கள் மூலம் சுவிற்சர்லாந்து அணியை தோற்கடித்தது போர்த்துக்கல் அணி. இந்த வெற்றியின் மூலம் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நேஷன்ஸ் லீக் தொடரில் முதலிடம் பிடித்தது.

இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கம் நேஷன்ஸ் லீக் தொடரில் 2019ஆம் ஆண்டு போர்த்துக்கல் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில், நடப்பு தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் போர்த்துக்கல் - சுவிற்சர்லாந்து அணிகள் மோதின.

போர்த்துக்கல்லின் வில்லியம் கார்வலோ 15ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்தார். இதன் பின்னர், 35, 39ஆவது நிமிடங்களில் கிறிஸ்ரியானோ றொனால்டோ கோல்களை அடித்தார்.

இறுதியில் 68ஆவது நிமிடத்தில் கான்செலோ கோல் போடவே, சுவிற்சர்லாந்து அணியை 4-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது. (ஐ)





## ஓய்வின்றி தொடர முயற்சிக்கிறேன்!

### ரபேல் நடால்

பாரிஸ், ஜூன் 07

“எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால், நான் தொடர்ந்து போராடப் போகிறேன்”, என்று தனது ஓய்வு குறித்து கூறியிருக்கிறார் ரபேல் நடால்.

கிராண்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு கிண்ணத்தை 14ஆவது தடவையாகக் கைப்பற்றிய பின்னர் பேசிய நடால்,

”நான் 36 வயதில் இங்கு வருவேன் என்று நான் ஒருபோதும் நம்பவில்லை. மீண்டும் போட்டித்தன்மையுடன், இறுதிப் போட்டியில் எனது வாழ்க்கையின் மிக முக்கியமான மைதானத்தில் மீண்டும் ஒரு முறை விளையாடுகிறேன். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் தொடர முயற்சிப்பதற்காக நான் தொடர்ந்து போராடப் போகிறேன்,” என்றார். (ஐ)






## கொழும்பில் பிரதமர் அலுவலகத்திலிருந்து ரஷ்ய தூதரகம் வரை கவனவீர்ப்பு பேரணி

கொழும்பு, ஜூன் 07

கொழும்பில் நேற்று பிரதமர் அலுவலகத்திலிருந்து ரஷ்ய தூதரகம் வரை கவனயீர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

தற்போது நிறுத்தப்பட்டுள்ள இலங்கை - ரஷ்யாவுக்கான விமானங்கள் மீண்டும் இயங்க வேண்டுமென கவனயீர்ப்பு பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் அவர்கள் பிரதமர் அலுவலகத்தில் கடிதமொன்றை கையளித்துள்ள அதேவேளை, பேரணியாக சென்று ரஷ்ய தூதரகத்திலும் கடிதமொன்றை கையளித்தனர்.

ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான நிறுவனம், இலங்கைக்கான விமான சேவைகளை மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தியுள்ளது.

இந்த விமான சேவைக்கு சொந்தமான விமானத்தை ரஷ்யாவுக்கு புறப்பட அனுமதிக்காமல் கட்டுநாயக்காவில் தடுத்து வைத்தமையே இதற்கு காரணமாகும் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய, இலங்கைக்கு வர்த்தக விமானங்களை இயக்க மாட்டோம் எனவும், இலங்கைக்கான பயணத்துக்கு விமான ரிக்கெட்டுகளை விற்க மாட்டோம் எனவும் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விமானம் விமான ஊழியர்களுடன் மாத்திரமே பயணிக்கும் என விமான சேவை பேச்சாளர் ஒருவர் தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வரவுள்ள உணவு பற்றாக்குறையை எச்சரிக்கைகள் மட்டும் தடுக்காது!

### சுட்டிக்காட்டுகிறது விவசாயிகள் மன்றம்

கொழும்பு, ஜூன் 07

**பல காரணங்களை மேற்கோள் காட்டி, கடந்த கால நடவடிக்கைகளின் மீது பழியை சுமத்தி வரவிருக்கும் உணவுப் பற்றாக்குறை பற்றிய கடுமையான எச்சரிக்கைகள் தொடர்கின்றன. முன்கூட்டியே எச்சரிப்பது பயனுள்ளது மற்றும் புத்திசாலித்தனமானது என்றாலும், எச்சரிக்கைகள் மட்டுமே சாத்தியமான பற்றாக்குறையைத் தடுக்காது என்று விவசாயிகள் மன்றம் தெரிவித்துள்ளது.**

இந்தநிலையில் அறுவடை மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புவோர், புலம்புவதற்குப் பதிலாக, ஒருபோதும் வராத உள்ளீடுகளைக் கோருவதற்குப் பதிலாக, கிடைக்கக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி முடிந்த வரை சிறந்தவற்றை மேற்கொள்ளவேண்டும் என்று அந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது.

நீண்ட காலத் தீர்வுகளை உத்திகளை வகுப்பது, நீண்ட கால இலக்குகளை அடைவதற்கான பாதையை உருவாக்குவது, குறுகிய கால முடிவுகளும் செயல்களும் அந்தப் பாதையை எந்த வகையிலும் தடை செய்யாமல் இருப்பதை உறுதி செய்வது என்பன மேற்கொள்ளப்படவேண்டும் என்று விவசாயிகள் மன்றம் கோரியுள்ளது.

டொலர் பற்றாக்குறை காரணமாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை பொறுத்தவரை, பரிந்துரைக்கப்பட்ட அளவை பூர்த்தி செய்வதுகூட சாத்தியமில்லை.

எனவே இந்த மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் உகந்த பயன்பாட்டைக் கருத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது என்றும் மன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் மூன்று பரிந்துரைகளை மன்றம் அறிவித்துள்ளது.

அ) இரசாயன உரங்களை மட்டுமே பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் விளைச்சலைக் காட்டிலும், இரசாயனம் மற்றும் கரிம உரங்களின் தகுந்த கலவையானது 20 சதவீதத்திற்கும் அதிகமான விளைச்சலை அதிகரிக்கும் என்று பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் வெளிவந்த தகவல்களாகும். இந்த ஆராய்ச்சி மண் வகைகளை அடிப்படையாகக் கொண்டது மற்றும் பயிர் சார்ந் தது. எனவே, விவசாயத் துறையின் பரிந்துரைகளை உடனடியாக செயற்படுத்த வேண்டும்.

ஆ) இரசாயன உரத்தின் மீதான தடை நடைமுறைக்கு வந்ததிலிருந்து, பல விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் இரசாயனமற்ற இயற்கை உரங்களைத் தயாரித்து பயன்படுத்துவதைத் தேர்ந்தெடுத்தனர். எனவே அவசர சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த நடைமுறை உடனடியாக பின்பற்றப்படவேண்டும்.

இ) பயன்படுத்தப்படாத விளை நிலங்களை பயிரிடுதல் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் விவசாயிகள் மன்றம் கோரியுள்ளது. (அ)

## பாடசாலை சீருடை, புத்தகங்களுக்கு இந்திய, சீன உதவி கோரும் இலங்கை

கொழும்பு, ஜூன் 07

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடநூல் புத்தகங்கள் தொடர்பில் சீனா மற்றும் இந்தியாவின் உதவியைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இது தொடர்பாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக்க தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்கத் தேவையான துணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகச் சீனாவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றி பெற்றுள்ளதாகவும், தேவைப்படும் துணியில் பாதியளவு துணியை தந்துதவ சீனா இணங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேபோன்று பாடநூல்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசியை இந்தியாவிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## வட்டுவாகல் பாலத்தில் வீதி சமிக்ஞை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 07

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் பயணம் செய்பவர்கள் பாலத்திற்கு அருகாமை வீதி சமிஞ்ஞை இல்லாததால் போக்குவரத்தில் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர்.

பரந்தன்-முல்லைத்தீவு செல்லும் வீதியில் வட்டுவாகலில் அமைந்துள்ள பாலத்தில் வீதி சமிஞ்கை இல்லாதமையால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

அந்த வீதியில் அமைந்துள்ள பெரிய பாலத்தில் போக்குவரத்தில் பெரிய வாகனம் ஒன்றே பயணம் செய்ய முடியும். ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த வாகனம் வீதியை கடந்ததன் பிற்பாடே பயணம் செய்ய முடியும்.

ஆகவே இவ் பாலத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் சமிஞ்கை விளக்குகள் அமைக்காதமையால் வாகனச் சாரதிகள் பெரும் இடர்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ‘21’ குறித்து முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு நாளையதினம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

அரசியலமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி தமது நிலைப்பாட்டை எதிர்வரும் 08 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது.

கூட்டணியின் அரசியல் குழு, கொழும்பு நுகேகொடை செயலகத்தில் 08 ஆம் திகதி கூடவுள்ளது.

“நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, ஜனாதிபதி வகிக்க கூடிய அமைச்சுக்கள், பிரதமரை நீக்குவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம், அமைச்சர்களை நியமிப்பதற்கான பிரதமரின் அதிகாரம், இரட்டை குடியுரிமை, சுயாதீன குழுக்கள், நீதிமன்ற சுயாதீனம் உட்பட்ட விவகாரங்களை ஆராயும்.

அதேவேளை இவற்றை விட இந்த அரசியலமைப்பு திருத்தத்தின் பக்க விளைவாக விகிதாசார தேர்தல் முறைமைக்கும், 13ஆவது திருத்தம் மூலமான மாகாணசபை முறைமைக்கும் உடனடியாகவோ, காலம் கழித்தோ வரக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி விசேட அவதானத்தை கொண்டுள்ளது.” என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (அ)

## ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட பெண்ணின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

சாவகச்சேரி -கோவில் குடியிருப்பு கிராமத்தில் உள்ள கிருஷ்ணர் ஆலயத்தை நேற்றுக் காலை வலம்வந்து வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் சங்கிலியை இனந்தெரியாத நபர் ஒருவர் அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென் றுள்ளார்.

குறித்த வயோதிபப் பெண் ஆலயத்தை வலம் வந்து வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஆலய வாசல் பகுதியில் நின்று ஆலயத்தை இரு கை கூப்பி வணங்கியவேளையில் பின்புறமாக வந்த திருடன் பெண்ணின் ஒன்றரைப் பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளார்.

பெரியமாவடி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 67வயதான பெண் ஒருவரின் சங்கிலியே இவ்வாறு அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## புலிகள்...

வவுனியாவில் அவரின் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்த சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன் றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியத் தின்பால் செயல்படுகின்ற கட்சிகளின் தலைவர்களை கூட்டி இரண்டு மூன்று தினங்களாக விவாதித்து வருகின்றோம். இதில், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை கூறி வருகின்றார்கள். பாராளுமன்றம் கூடியதும் தமிழ் பேசும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இந்த விடயம் தொடர்பில் ஆராயலாம் என எண்ணுகின் றோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியுடனும் பேச இருக்கின்றோம்.

21ஆவது திருத்த சட்டத்தில் எமது மக்களின் கோரிக்கைகளை ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் குரலாக எவ்வாறு உள்ளடக்குவது என்பது குறித்து ஆராய வுள்ளோம். இதில், ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரங்கள் முற்றாக ஒழிக்கப்படவில்லை. தற்போது மக்களின் கோரிக்கை ஜனாதிபதி வீட்டுக்கு செல்ல வேண்டும், ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பவையே. ஆனால், இந்த விடயத்தில் 19ஆவது திருத்தச் சட்டத்தை கூடுதலாக பார்க்கலாம் என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஒட்டு மொத்தமாக - ஒரே குரலாக இணைந்து முன்வைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். 21ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் வருவதற்கு முன்னராக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள் ளது. அது, பாராளுமன் றில் விவாதத்துக்கு வரும் முன்னர் எங்கள் ஒருமித்த கருத்தை சொல்ல வாய்ப்பை உருவாக்க வேண்டும் - என்றார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமரானதும் புலம்பெயர் தமிழர்களின் உதவியை கோரியிருந்தார். தற்போது சில புலம் பெயர் அமைப்புகள் நிபந்தனையின் பேரில் உதவி வழங்க தயாராகின்றன இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள் என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய வினாவுக்கு பதிலளித்த அவர்,

"இன்றைய சூழலிலே புலம்பெயர் உறவுகளிடம் பணம் கோருவது என்பது சந்தர்ப்பத்துக்காக அவர்களைப் பயன்படுத் துவதுபோல் தெரிகிறது. இலங்கை அரசாங்கத்தால் புலம்பெயர் நாடுகளில் உள்ள எங்களின் அமைப்புக்கள் மீது ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையானது இலங்கை அரசாங்கத் தால் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

அத்துடன், மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதுடன் அவற்றுக் கான நிதி அதிகாரத்தையும் குறிப்பாக, முதலமைச்சர் நிதியை கையாளக்கூடிய வசதியைப் பிரதமர் செய்வதன் மூலம் இந்த நாட்டின் பிரச்சனையை தீர்க்க முடியும். இந்த விடயங்களில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும். அதுவரை புலம் பெயர் உறவுகள் முதலீடுகளை செய்வதற்கு நிச்சயமாக வரமாட்டார்கள்.

தற்போதும் பயங்கரவாத தடைச் சட்டம் காணப்படுகின்றது. இது நீக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில், புலம் பெயர் உறவுகள் தங்கள் முதலீடுகளை செய்த பின்னர் அரசாங்கம் திட்டமிட்டு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்ப தாகத் தெரிவித்து அவர்களின் முதலீடு களை முடக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன - என்றும் கூறினார்.

தற்போது நாட்டில் பரவலாக துப் பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மேலும் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் விடுதலைப் புலிகளின் அதிகாரங்களை மிகவும் சமாளிக்க முடியாது என்ற கருத்தை வெளியிட்டுள் ளார். உயிர்த்த ஞாயிறு படுகொலை செய்யப்பட்டதை போன்று விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம் என்ற ரீதியிலே இவ்வாறான துப்பாக்கி சூட்டு சம்பவங் களை இணைத்து காலிமுகத்திடலிலே இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டத்தை கலைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம், புலிகள் மீள் உருவாக்கம் என்ற சதித்திட் டத்தை தீட்டுகின்றதா என்ற சந்தேகம் எங்களுக்கு உருவாகின்றது.

துப்பாக்கி சூடு நடத்துபவர்கள் கைது செய்யப்படுவதில்லை என்பதுடன் அவர் கள் எங்கு போகின்றார்கள் என்பதும் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம் என்ற சதித்திட்டத்தை அரசாங்கம் செய்கின்றது. எனவே, நாங்கள் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும். தமிழர்களின் கையிலே பிரச்சனையை திணித்து தமிழர் கள்தான் இதற்கு காரணம் என்று கூறக்கூடியவர்கள்தான் இன்று ஆட்சி யில் இருக்கிறவர்கள். ஆகவே அவர்கள் இவ்விடயங்களை மிக சாதுரியமாக கையாளக்கூடும் - என்றார். (ஐ)

## அரச...

என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவை களுக்கு இந்தத் திட்டம் பொருந்தாது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட் டார். (ஐ)

## வர்த்தகரை...

ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

பிரசன்ன ரணதுங்க 2015 ஆம் ஆண்டு வர்த்தகர் ஒருவரை தொலை பேசியில் மிரட்டி அவரிடம் இருந்து ஆறு கோடியே 40 இலட்சம் ரூபாயை கப்பமாகக் கோரினார் என்று தொடரப் பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. (ஐ)

## தவணை...

அதிகளவில் நாடுகின்றனர். இந்நிலை யில், சைக்கிள்கள் 50 ஆயிரம் ரூபாயை கடந்துள்ளது. இந்நிலையிலேயே லீசிங் நிறுவனங்களை சைக்கிள்கள் ஈர்த்துள் ளன என்று கூறப்படுகின்றது. (ஐ)

## மீண்டும்...

தற்போதைய எரிபொருள் விலை சூத்திரம் மறைந்த நிதியமைச்சர் மங்கள சமரவீர அறி முகப்படுத்தியதைப் போன் றது. இது ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. ஆனால், தற்போதைய சூத்திரத்தின்படி எரிபொருள் விலை உலக சந்தை விலைக்கு ஏற்ப நடைமுறைக்கு வரும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதானி...

மின் திட்டங்களை வழங்க முடியாது. அப்படி வழங்குவதானால், இரண்டு அர சாங்கங்களுக்கு இடையிலான பரிவர்த்த னையில் மட்டுமே வழங்க முடியும். ஆனால், அதானி குழுமம் இந்தியாவில் உள்ள அரசு நிறுவனமல்ல. அந்த நாட்டில் உள்ள தனியார் நிறு வனம்.

இலங்கையின் அதிக பெறுமதி வாய்ந்த காற்றாலை மின்சார பிரதேசங் களான மன்னார் மற்றும் பூநகரியில் இந்த திட்டத்திற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளது. உத்தேச அலகு ஒன்றின் விலை 7.55 அமெரிக்க டொலர்களாகும். இந்தத் திட்டத்துக்காக 5 டொலர் வழங் கப்பட்டது. ஆனால், அது நிராகரிக் கப்பட்டது. மேலும் அமெரிக்க டொலர் களில் பணம் செலுத்துவதால் அதிகளவி லான அந்நியச் செலாவணி நாட்டை விட்டு வெளியேற நேரிடும் - என்றும் காற்றாலை சக்தி சங்கம் தெரிவித்துள் ளது. (ஐ)

## 800 மெற்றிக் தொன் டீசலை விநியோகிக்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 07

சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலை யத்திலிருந்து 800 மெற்றிக் தொன் டீசலை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மசகு எண்ணெய் பற்றாக்குறையால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பமாகின. கிடைக் கும் மசகு எண்ணெய் 15-20 நாட்கள் நீடிக் கும் என இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 800 மெற்றிக் தொன் டீசல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆதாரங்களின்படி, 450 மெற்றிக் தொன் மாத்திரமே விநியோகஸ்தர் களுக்கு வழங்கப்படும், மீதமுள்ளவை தொழில்துறை நடவடிக்கைகளுக்கு மொத்த விநியோகமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நிமால்...

சிறிசேன உறுதியளித்துள்ளார் என அறியவருகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டம் மைத்திரிபால சிறி சேனவின் இல்லத்தில் நடைபெற்றது. நிமால் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர , ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, துமிந்த திஸநாயக்க மற்றும் லசந்த அழ கியவண்ண ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, "கட்சியில் நாங்கள் வகித்த பதவி பறிக்கப்பட்டுவிட்டது என நீங்கள் அறிக்கை விடுத்துள்ளீர்கள். அப் படி அறிக்கை விடுத்து, எதற்காக சந்திப் புக்கு அழைக்க வேண்டும்? இனி நாங்கள் வரப் போவதில்லை" என்று நிமால் சிறி பால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகி யோர் குறிப்பிட்டனர்.

இதன்போது, "நான் அந்த அறிக் கையை விடுக்கவில்லை. கட்சியின் பொதுச் செயலாளர்தான் விடுத்துள் ளார். எது எவ்வாறு அமைந்தாலும், உங்கள் இருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது" என்று மைத்திரி பால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

"சர்வகட்சி அரசு என்ற யோசனை சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குரியது. எனவே, அதனை ஆதரித்து அமைச்சுப் பதவிக ளைப் பெறுவதில் தவறில்லை" என்று இதன்போது உறுப்பினர்கள் குறிப்பிட் டுள்ளனர். (ஐ)

## துப்பாக்கி சூடு: கொழும்பில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூன் 07

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் இளைஞன் ஒருவர் உயிரி ழந்தார் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

கொழும்பு -15 அளுத்மாவத்தை, ரெட்பானவத்தை பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலேயே 23 வயதான இளைஞன் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கி சூட்டை நடத்தியவர்கள் யார் என்று இனங்காணப்படவில்லை என்றும், இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## லிட்ரோ விலை அதிகரிக்காது!

கொழும்பு, ஜூன் 07

எரிவாயுவின் விலையை அதிகரிப் பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப் படவில்லை. சமூகவலைத்தள தகவல் களை நம்ப வேண்டாம் என்று லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

எனினும், நாளை புதன்கிழமை வரை எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப் பட மாட்டாது. கையிருப்பில் போதிய ளவு சமையல் எரிவாயு இல்லாமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய இரு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. எரிவாயுவை தரையிறக்கும் செயல் பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படு கின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

முதல் கட்டமாக விவசாயிகளின் தேவையின் (பயிர் நிலங்களின் அளவின் பிரமாணம்) அளவில் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள் இன்றைய தினம் தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பித்து எரிபொருள் அட் டையை பெற்று மறுநாள் முதல் மண் ணெண்ணெயைப் பெற முடியும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

நெல்லிப்பள்ளம் - சோரன்பற்று - பளை

அருள்மிகு கண்ணகை அம்மன் திருக்கோயில்

வருடாந்த பொங்கல் உற்சவமும் தீமிதிப்பும் - 2022



இன்று செவ்வாய்க்கிழமை (07.06.2022) காலை வளந்து நேரலுடன் ஆரம்பமாகி பொங்கல் இடம்பெறும். தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பின்னர் தீமிதிப்பு இடம்பெறும்.



பொங்கல் உற்சவம் ஓம் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பாகும்.

ஈழநாடு
Eelanadu




# முடிவடையும் இந்தியக் கடனுதவி; மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

கொழும்பு, ஜூன் 07

**இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் முடிவடையும் தருவாயில் உள்ளதால் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.**

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ்வழங்கப்பட்ட எரிபொருள் காரணமாகக் கடந்த மாதம் இலங்கையில் ஏற்பட்ட பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவுக்குச் சீர் செய்யப்பட்டது.

அதற்கு முன்னர் எரிபொருள் நிரப்பிய கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து தமக்கான கட்டணத்தை டொலரில் பெற்றுக் கொள்ளும் வரை நாள் கணக்கில் துறைமுகத்தில் காத்திருக்க நேர்ந்ததன் காரணமாகத் தாமதக் கட்டணம் பெருளவில் செலுத்த நேர்ந்திருந்தது.

இந்நிலையில் இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் நிரப்பிய கடைசிக் கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது.

அத்துடன் இலங்கைக்கான இந்தியக் கடனுதவித் திட்டம் பூர்த்தியாகிவிடும். இலங்கையின் டொலர் கையிருப்பு கடுமையான பற்றாக்குறையில் காணப்படும் நிலையில் புதிதாக டொலர்களை தேடிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாது போனால் மீண்டும் எரிபொருள் பற்றாக்குறை தீவிரமாக ஏற்படும் அபாயம் உள்ளதாக எரிபொருள் கூட்டுத்தாபன அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 - 04 - 1979

மறைவு 25 - 04 - 2022

### பாலசுப்ரமணியம் சதீஸ்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancy யை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் சதீஸ் அவர்கள் 25.04.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் அன்னம்மா தம்பதிகளின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு பரமேஸ்வரி தம்பதிகள் மற்றும் கந்தையா சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு பேரனும்,பாலசுப்ரமணியம், காலஞ்சென்ற செல்வராணி(ரதி) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குணரட்ணம், பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், தாருகா அவர்களின் அன்புக் கணவரும், அக்ஷியா அவர்களின் ஆருயிர் தந்தையும்,சகிலா, சத்தியா ஆகியோரின் அருமைச் சகோதரரும், ஜெனார்த்தனன்(ஜெனா- பிரான்ஸ்), றஜனிகாந், டினோசன் (கோபி- ஜேர்மனி), விதுஷன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்றவர்களான பரமானந்தம், பரஞ்சோதி மற்றும் பாலசுந்தரம்(ஜேர்மனி), பாலரட்ணம், சண்முகநாதன், சண்முகரட்ணம்(ஜேர்மனி), இந்திராணி, விஜயராணி, காலஞ்சென்றவர்களான ஜெயராணி, ஜீவராணி ஆகியோரின் அன்புப் பெறாமகனும்,புஸ்பராணி, யோகராணி, இந்திராணி (ஜேர்மனி), மகேந்திரன், சுரேந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும்,சஞ்சனா, ரீத்திஸ், அனனிஜா ஆகியோரின் ஆசை மாமாவும்,நதுஷா(ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகலனும் ஆவார்.

கிரியை
Wednesday, 08 Jun 2022 9:00 AM - 11:30 AM
Le Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

தகனம்
Wednesday, 08 Jun 2022 12:30 PM
Le Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse,France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு.
**தாருகா - மனைவி** Mobile : +33667712512
**பாலசுப்ரமணியம் - தந்தை** Mobile : +94775243849
**சுரேந்திரன் - மாமா** Mobile : +33695406908
**ஜெனா - மைத்துனர்** Mobile : +33751582772
**விதுஷன் - மைத்துனர்** Mobile : +94778830073
**கோபி - மைத்துனர்** Mobile : +491743778526
**சபேசன் - சித்தப்பா** Mobile : +33766788146

# ரஷ்ய விமானத்தின் தடை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 07

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் இலங்கையிலிருந்து வெளியேறுவதைத் தடுக்கும் தடை உத்தரவை இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரஷ்ய ஏரோபுளோட் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றுக்கு இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அண்மையில் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவின் பிரகாரம், ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்குச் செல்லவிருந்த ஏ330 ரக விமானம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் , சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தை பரிசீலித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க, குறித்த தடை உத்தரவை இடைநிறுத்தி உத்தரவிட்டார். (அ)

# குழந்தைகளின் ஊட்டச்சத்தில் அதிக கவனம் செலுத்துங்கள்!

## சுகாதார நிபுணர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 07

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரிக்கும் என சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளில் அதிக கவனம் செலுத்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்க ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் சேனக கமகே, வீடுகளில் பயிரிடக்கூடிய அனைத்து மரக்கறிகள் மற்றும் செடிகளையும் கட்டாயம் பயிரிட வேண்டும்.

நாடு பாரிய உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கி வருகிறது.

முருங்கை இலைகளில் இரும்பு, கல்சியம் மற்றும் போலிக் அமிலம் தவிர அனைத்து 20 புரதங்களும் இருப்பதால் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய பெற்றோர்கள் அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை.

ஒரு பலாப்பழத்தின் மூன்று விதைகள் ஒரு முட்டையில் இருந்து பெறப்படும் ஊட்டச்சத்துடன் ஒத்துப் போகின்றன-என்றார். (அ)




## மரண அறிவித்தல்



தோற்றம் 17 - 03 - 1938

மறைவு 04 - 06 - 2022

### சுந்தரம் பூதப்பிள்ளை (விஜயரட்ணம்)

*(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்- கூட்டுறவு திணைக்களம், கல்வி திணைக்களம்)*

யாழ். காங்கேசன்துறை குமாரகோவில் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மட்டக்குளி, நோர்வே Ulsteinvik ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் பூதப்பிள்ளை அவர்கள் 04.06.2022 சனிக்கிழமை அன்று நோர்வேயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுந்தரம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,சாரதாதேவி அவர்களின் பாசமிகு கணவரும்,செந்தில்குமார்(நோர்வே), நிமலினி (பிரித்தானியா), செந்தில்நாதன்(நோர்வே), பிறேமினி (நோர்வே), மகேஸ்வரன்(பிரித்தானியா), சிரோமினி(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜெபராஜன், வத்சலா, சதாநந்தினி, தயாநந்தன், லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற நேசம்மா (மலேசியா), தனேஸ்வரி(நோர்வே), காலஞ்சென்ற பரமேஸ்வரன், புவனேஸ்வரி(இலங்கை), சிவனேசன் (நோர்வே), ராஜேஸ்வரன்(கனடா), யோகேஸ்வரி (நோர்வே), யோகநாதன்(நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,நிஷாந்தன், நிரோஜன், நிருபிகா, நிலக்ஷன், ஜினேந்திரன், அக்சரன், ஜானுஷ்யா, சஜின், சஜித்தா, சாகித்தியா, கவிஷன், ஜெசன், ஜெகனி, கிருத்திகா, கிருஷிகா, கீர்த்தீஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், உஷாநந்தினி, கௌதமி, ரஜீவன் ஆகியோரின் பாசமிகு பாட்டனும்,அபிநயா, ஆதேஷ், அர்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

*கிரியை :*
Thursday, 09 Jun 2022 6:00 AM - 9:00 AM
Stiftelsen Vikholmen Sjøgata 78, 6065 Ulsteinvik, Norway

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**செந்தில்குமார் - மகன்** Mobile : +4741638331
**நிஷாந்தன் - பேரன்** Mobile : +447956194079
**தயாநந்தன் - மருமகன்** Mobile : +447930255576

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்

7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர் நாடகம்

11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - ஆடுகளம், ஒரு கல் ஒரு கண்ணாடி திரைப்படக் காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : சினிமா சினிமா

6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

7.00 மணி : இன்றைய சிந்தனை

7.05 மணி : இன்றைய நாள்

7.20 மணி : ஈழத்து சித்தர்கள்

7.30 மணி : மங்கள இசை

8.00 மணி : அருளுரை

8.30 மணி : திருவாசகம்

9.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)

10.00 மணி: அன்னை மரியா

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)

03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

07.00 மணி : ஞானவழி

07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு